KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ௵ பிப்ரவரி ௴ 21௳ [No. 8.

OFFICE OF THE REG… 1929 MADRA…

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 141
2. ஏமாங்கதத் திளவரசன் (A Novel)
T. N. சேஷாசலம் B.A., B.L. 143
3. தமிழ்ப் பாடம் 145
4. அப்பர்
E.N. தணிகாசலமுதலியார் B. A., B. L. 147
5. குலசேகரர்
T. P. மீனாட்சிசுந்தரன் M.A., B.L., 150
6. கம்பனோ வம்பனோ (A Letter)
P. இராமாநுஜன் 152
7. சீர்திருத்தம், (By Emerson.)
K. இராஜகோபாலன் 153
8. கம்பராமாயணம்
T. N. சேஷாசலம் B. A., B. L. 154
9. வர்த்தமானம் 159

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங் தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

## கலா நிலயம்.

### கலைகளே கதி.

I

இரயில் வண்டியிற் கொலைகளும் இராணியின் அறைகளிற் கொள்ளையும் நாடோறும் நாடெங்கும் நடந்துகொண்டிருக்க வாய்க்கெளிதாக இருக்கின்ற சில சொற்களை வழங்கிவருவதா லேது பயன்! விவாக வயது உயர்ந்தாலென், தாழ்ந்தாலென் ! இருக்கின்ற செல்வத்தை இல்லாதார்க்கு எடுத்தெடுத்து உதவாதவரையில் இனியும் வர்த்தகமும் தொழில்வளமும் வளர்ந்தாலென், வறண்டாலென்! கடவுளையும் அக்கடவுள் மணங்கமழும் காவியங்களையும் சிலர் கைவிதிர்த்துக் கழிக்கின்றாரென்றால் உரைப்பதற் கென்னினியுளது! இவைகளுக்கிடையே ஸைமனோ டெழுவரும் வந்தாலென், வாராதொழிந்தாலென் !

உண்மையில் உயிர்நிலையாயவற்றை யுணராமல் துரும்பெலாம் எடுத்து மலையாகக் குறிக்கின்ற கொள்கையால் விளைகின்ற சூழ்ச்சிகள் இவை. இவைகளை விலக்குதற்கென்று முயலும் முயற்சியால் ‘தொண்டு’ புரிவோர் எண்ணிறந்தோர்எங்கும் உளராயினும்,அவரது நன்னோக்கத்திற்கு நேரெதிராய், இத்தீமைகளுக்கு எவையெவை முதற்காரணமாயிருக்கின்றனவோ அவைகளை மேன்மேலும் பெருகக் காண்கின்றோம். சரித்திர நூல்கள் சொல்வதை ஒன்று மெய்யென்று கொண்டால் கொள்ளவேண்டும், அல்லது பொய் யென்றுமறுத்தால் மறுக்கவேண்டும். இதுமுறை.அவ்வாறின்றி மெய்யென்றும் நம்பி அவைகளது முடிபிற்கும் மாறாக விவகரித்துவருகின்ற இக்காலத்து மனப்பான்மையைஎன்னென்று பேரிட்டழைப்பதென வெமக்குத் தெரியவில்லை. ஆயிரம் ஆயிரத்தைந்நூறுவருடங்களுக்குமுன் இவ்விந்தியநாட்டில்,“கொள்வாரிலாமைக் கொடுப்பாருமில்லை, கள்வாரிலாமைப் பொருள் காவலுமில்லை”.எல்லார்க்கும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தியிருந்தது. இது கம்பனைய கவிகளதுமனத்திற் கட்டிய ஆகாயக்கோட்டையன்று.சந்திரகுப்தன் காலத்தில் வந்த பாஹியான்,ஹர்ஷன் காலத்தில்வந்த ஹியூன்தஸாங் முதலியபுத்தசன்னியாசிகளின்யாத்திரைக்குறிப்புக்களால் இவை காணக்கிடக்கின்றன.வறியோரை மறிக்கவேனும் கள்ளரைவிலக்கிக் காக்கவேனும் வீட்டிற்குத் தாழ்கோல் ஒன்று வேண்டுமென்ற நினைவே அந்நாள் இமயமுதற்குமரிவரையில் நிகழ்ந்ததில்லையாம். இந்நிலை இந்தியாவில் மாத்திரமன்று.இங்கிலாந்திலும் ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முன் சிறுமி ஒருத்தி கையிற் பணப்பையுடன் வடகோடி முதல் தென்கோடிவரையில் யாதும் பயமின்றிப் பயணஞ்செய்வது இயலுமெனக் கார்லைல் கூறியுள்ளார். உலகசித்திரம் அதனையும் இதனையும் ஒப்புநோக்குங்கால் யாரே மனமுளையார்.

இவ்வாறு ஒப்புநோக்குதலில் நூற்றாண்டுகள் இடைவைத்து நோக்கவும் வேண்டா. நம்முடைய ஆயுள்காலத்திலேயே நம் கண் முன்னேயே வருடத்திற்குவருடம் இத்தகைய கொடுமைகள் மிகுகின்ற

தைக் காண்கின்றோம். கொலையும் கொள்ளையும் வஞ்சனையும் வறுமையும் பிணியும் சென்ற பன்னிரண்டாண்டுகளுக்குமுன் இருந்த அளவைக்காட்டிலும் இந்நாள் பன்மடங்கதிகமென்பதற் கையமில்லை. முன் தனித்தனிக் கொள்ளையுங்கொலையும் பகையுமிருந்தவெனின் இப்பொழுது ஜாதிக் கொலையும், வர்த்தகம் வழக்கு என்ற பெயர்களால் நடைபெறும் பொதுக் கொள்ளையும், மதப்பகையும் பெருகிவருகின்றன. முன், மனிதர் சிலர் மனிதரைப் பகைத்தனரென்றால் இன்று கடவுளையும் கவிகளையுமே பகைக்கின்றனர். முன், அறியாமையை அகற்றவேண்டுமென்ற ஒரு நினைவேனும் இருந்தது; இன்றைக்கோ அறியாமையே ஆற்றலென அறைகூவுகின்றது.

இவைகளைக் கருத்துட்கொண்டு இனிவரும் சில உரைகளை ஆய விழைக்கின்றோம். அன்புடன் எமது பத்திரிகையை நன்கு மதித்துத் தமது மகிழ்வை நிருபத்தின் நெறியாலும், சந்தாநேயர்களைச் சேர்த்துத்தரும் முறையாலும் தெரிவித்துவரும் நண்பர் பலர். அவ்வகைப் பெருந்தகையாளருள் ஒருவர் இவ்வாரம்,

"கலாநிலயத்தில் கலைப்பழக்கந் தவிர நாட்டுத் தொண்டு நலத்தொண்டு உரிமைத் தொண்டு முதலியன மறக்கப்பெறுகின்றனவே. கலையிற் பழகித் தினைத்தேனும் நடத்தையில் நேர்மையிலரே. அதன் காரண மென்னவோ! கலையறியாதாரிற் பலரே (பாமரர்) நிலை குலையாது வதிகின்றனரென நாடோறும் உணர்தற் கியலுகின்றது. இன்னவித கருத்துக்கள் முரண்பாட்டையெமக்கு விளைவிக்கின்றன."

என்று எமக்கு வரைந்துள்ளார். இவ்விதம் வினவுவதை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். சிந்தனையென்னுந் தன்மையே மிகமிகக் குறைந்துபோகின்ற இந்நாளில் இந்நண்பர்போல் இக்கால வுலகியலைச் சிந்திக்கும் மனமுடைய எவர்க்கும், இவர்க்குற்ற இவ்வையம் ஒருகாலல்லாக் காலொருகால் தோன்றியே தீரும். இவ்வையங்களின் ஒவ்வொரு பாகத்திற்கு நாம் ஒவ்வோரிடத்தில் வேறு வேறு சந்தர்ப்பங்களில் யாம் அறிந்தபடி தெளிவு கூறிக் குறிப்பித்திருக்கின்றோமாயினும் தொடர்ச்சியாகத் தெரிவித்தற்கு அமையம் வாய்த்ததில்லை அச்செவ்வி இந்நண்பர் தூண்டுதலால் ஈண்டுப்பெற்றதற்குப் பெரிதும் உவக்கின்றோம். இதனைத் தெளிவுறுத்தற்கு நாம் இதுகாறும் வகுத்துக்காட்டியிருப்பவைகளை இங்குத் தொகுத்துச் சுட்டிக்கொண்டு போவதொன்றே அமையும். எமது உரையைத் தொடர்ந்து ஆய்வதற்கு விரும்புகின்ற நண்பர்கள் நாம் குறிப்பிற் கூறிக்கொண்டுவருந் தலையங்கங்களை உடனுக்குடன் எடுத்து மீண்டு மோர்முறை ஓதிக்கொள்ள வேண்டிக்கொள்கின்றோம்.

கலாநிலயம், கலைப்பழக்கமே நல்லன அனைத்திற்கும் ஆதாரமென வற்புறுத்தி வருவது உண்மையே. ஆயினும், அது நாட்டுத்தொண்டு நலத்தொண்டு உரிமைத்தொண்டு ஆகிய தொண்டுகளை மறக்க நினைத்ததில்லை. அவ்வாறு மறக்க நினைப்பதுபோல் தோன்ற நேர்ந்ததெனில் அது நினைத்ததை நோக்கச் சொல்வதற்கு இளைத்த குறையால் நேர்ந்திருக்கவேண்டும். நாட்டிற்கும் நலத்திற்கும் உரிமைக்கும் தொண்டு செய்வோர் தொகை நாளுக்குநாள் இப்பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக அதிகரித்துக்கொண்டு வருகின்றதானாலும், அதனால் இம்மியளவேனும் நன்மை எவர்க்கும் எவ்வகையிலும் கைக்கூடாததைக் காட்டி அத்தொண்டர்களின் கைகடந்து தீமைகள் மிகுகின்றதை நாம் எடுத்து இயம்புவதால், அன்னார்தம் தொண்டுகளை ஆற்றும் நெறி பயனுடைத்தோ அன்றோவென்று அயிர்த்தவர் களாகின்றோமேயன்றித்தொண்டர்களின் நோக்கத்திற்கேனும் எவ்வெவரும் தொண்டு புரிதல் வேண்டுமெனும் கொள்கைக்கேனும் பழுதுரைக்க நினைத்தவரல்லேம்.

நாட்டிற்குத் தொண்டுபுரிதல் என்னுமிக் கருத்துப் பெரும்பாலும் அரசியல் வாதங்களையும் கட்சிக் கழகங்களையுஞ் சூழ்ந்திருக்கின்றது. சிறுபான்மை, ஆசாரச் சீர்திருத்தங்களைச் சட்டத்தின் மூலமாகவும் பொதுஜன அபிப்பிராயத்தின் கிளர்ச்சி மூலமாகவும் செய்வது நாட்டினது தொண்டு எனக் கருதப்படுகின்றது. இப் பின்னது நாட்டிற்குரிய தொண்டு என்னும் வகையில் ஒருவாறு சேருமெனினும், இதுவும் கல்வி முதலிய இயக்கங்களும் நமது நண்பர் குறிக்கின்ற 'நலத்தொண்டு' என்பதனுள் அடங்கலாம். உரிமைத் தொண்டு என்பது அரசியலும் குடியியலும் கலந்து நிகழ்கின்ற சில செய்கைகளுக்குள் சேரும்.

இம் மூவ்வகைத் தொண்டுகளின் பலதிறப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர், மேனாட்டாரும், ஜப்பான்போன்ற கீழைநாடுகளும் 'முன்னேற்றம்' அடைந்திருக்கின்றனவென்று ஒரு கானல்நீரைக் காட்டிக் காட்டி விவகரிக்கின்றனர். மேனாட்டு முன்னேற்றத்திலும் அதற்கு ஆதாரமாயிருக்கின்ற மேனாட்டு நாகரிகத்திலும் சொல்லொணாத்தீமைகள் இருக்கின்றனவென்று ஒப்புக்கொள்கின்றனரானாலும், அந்நாட்டு முறைகளையே கையாண்டு அவ்வகை முன்னேற்றத்தையே அடைந்து, ஆனால் அத்தீமைகள் மாத்திரந் தீண்டாமல் தப்பிவிடுவோம் என்று விவகரிப்பதைக் காண யாவர்தாம் வியப்படையார். எல்லாரும் எங்கும் இன்புற்றிருக்கவேண்டுமெனும் ஆசை உடைய நன்மக்கள், துன்பமேயாய் நிகழ்ந்து துன்பமேயாய் முடிகின்ற முறைகளையும் நோக்கங்களையும் மேற்கொள்வது ஏனென வியப்பதுடன், எமர்ஸன் கார்லைல் ரஸ்கின் அனைய மேனாட்டுப்போறிஞர்தம் கட்டுரைகளைக்கொண்டு அம்மேனாட்டில் சுகமேனும் செல்வமேனும் உரிமையேனும் உண்மையான வாழ்வேனும் பொதுஜனங்கள் எய்தியதில்லை என்பதை இவ்விதழ்களில் மொழிபெயர்த்தும் விளக்கியும் காட்டியுள்ளோம்—(வால்யூம் 1. பக்கம் 16, 55, 93, 196, 211, 234, 257, 262, 294, வால்யூம் 2. பக்கம் 135, 153). இம்மேன்மக்கள் கூறுகின்ற முடிவேனும் அம்முடிவை எய்துகின்ற தர்க்கமுறையேனும், அவர் எடுத்துக்காட்டும் உதாரணங்களேனும் பிழையுடையனவென்று மறுப்பார் இங்குமில்லை, அங்குமில்லை. எந்நாளு மிருந்ததில்லை; இருப்பதற்கு மியலாது. இனித் தொடர்வதை உணர நாம் இதனை மறக்காமல் மனத்துள் காத்தல்வேண்டும்.



OFFICE OF THE REGIST... 192 MADRA...

# ஏமாங்கதத் திளவரசன்.

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

## 1. கண்ணிற் கோரு மண்.

127 பக்கத் தொடர்ச்சி

பஞ்சரவல்லி எழுந்து புன்னகைபுரிந்தனளாய், "எந்தாய், மந்திராலோசனை முடிந்ததோ! நீ செப்பியதும் முடிவுரையோ! இனி யதை மாற்றுவதற்காகாதோ யாம் போகலாமோ!" என்று கேட்டனள்.

"ஆம், இது முடிவுரையே", என்றனன் புஜங்கன்.

"எது முடிவுரை?"

"இந்த ஏமாங்கத நாட்டிலே ஒரு பாதி நான் ஆள்வது."

"ஆயின், எனதரசத்தந்தையே, மந்திரித் தாயுடன் ஆய்ந்த மந்திரத்தில் ஒன்று மறந்தாய். அச்சாணியுமின்றி உனது பேய்த்தேரை நடத்தச் செல்லுமோ!"

"அச்சாணியாம், பேய்த்தேராம்! ஏனிச் சிறுமி சொல்வன தெரிந்து சொல்லலள்......பஞ்சரா, உன் கருத்தறிந்தேன். ஆயினும், யான் கொண்ட இக் கொள்கையையே பின்னும் தொடர்வேன்."

"என் கருத்தறிந்தாய் என்று நீ கூறுவதெல்லாம் நிசமன்று. அஃதறிந்தால், எந்தாய், கொள்கையைப் பற்றிப் பின்சொல்லொன்று சாற்றியிராய்."

"தாயொடு நீயும் என்னைவிட் டகன்றுவிடுவதாகத் தானே வெருட்டுகின்றனை! சித்தம்போல் செய்யலாம். எனக்குற்ற சுகத்தை உடன்நின்று அனுபவிக்கத் தெரியாத மனைவியும் மகளும் இருந்தாலென்ன, போனாலென்ன! கண்காணாது போய்விடுங்கள். திரும்பாவழி தெரிந்து செல்லுங்கள்."

"ஆருயிர்த் தந்தாய், எங்களைத் துரத்திவிட்டு நீ அவ்வளவு எளிதில் அரசுபுகுவதற் கில்லையே! ஐய, யான் ஒவ்வினாலன்றி இவ்வரசு உனக்கு வாய்க்காதென்பதை உணர்வதற்கான முயற்சிகளை நீ செய்யாதது என்னே!"

இன்னவாறு பஞ்சரவல்லி இடித்துரைத்தாளாயினும் கண்களில் நீர்மல்க நெட்டுயிர்ப்பு வீங்கினாள். வாசவனை அவள் மணம் செய்துகொள்வதே புஜங்கனது பேராசை வளர்ந்து தழைப்பதற்கு ஆணிவேராய் அமைந்துள்ளது என்பதை புஜங்கன் அயர்ந்துளான். சிங்கமுகனுடன் இவன் புகுந்துள உடன்படிக்கையில் முதலும் முக்கியமுமான பாகமும் இதுவே. பஞ்சரவல்லி இதற்கு இசையாளாயின் புஜங்கனுக்குப் பின் நாடேது, நகரேது! மற்றிவன், தன் அவா நிறைவேறுவதற்கும் பஞ்சரவல்லிக்கும் பொருந்திய அந்த நெருங்கியதொடர்பை மறந்ததும் புதுமையன்று. தன்மகள் வாசவனை மறுப்பதும் கூடும் என்றவன் கனவிலும் நினைத்திரான். ஆதலாற்றான் பஞ்சரவல்லியை அவன் மதியாமலே அம்முடிவுரை கூறிவிட் டிருத்தல் வேண்டும். ஆசையெனும் இருள்பொதிந்த அவன் மனத்தில் துயில்போயிருந்த அறிவை இவள் கூறிய இக்கனல் சுட்டெழுப்பியது. "என்ன பஞ்சரா, கோமகனை மணங்கொள்ள நீயும் மறுப்பாயோ?" என்றனன்.

"மறுத்தேன்" என்றனள் அவள்.

"மறுத்தாய், மங்கை நீ மறுத்தாய்! மனம் அறியாது பிதற்றுகின்றனை. வாசவன்பால் நினக்குள ஆர்வத்தினளவு தெரிந்த எனக்கோ இது விளம்புகின்றாய்!"

"ஆயின் என்னைத் தகவிலா விலைக்கு விற்றாய் எனும் பழி பூணுதியோ? எந்தாய், நின் குலமென்ன, வீரமென்ன, வேந்தனே நின்மாட்டு வைத்துள பரிவுதான் என்ன! ஒன்றிற்கு மொவ்வா இவ்வினையால் உலகுள்ளளவும் தீராத வசையே கண்டாய்!"

"நற்றாய்க்கு ஏற்றமகள் நீ வெருட்டற்கஞ்சேன்."

"எனின்; ஐய, யான் உரைப்பதொன்றுண்டு. வாசவப் பெருந்தகை என்வயின் ஒருதீதும் எண்ணான். ஆயினும் என்! நாடு பறிக்கும் நின் கைதவம் இதற்கு நானும் ஒருகை தந்தேன் என்று உலகம் பழிப்பது திண்ணம். இப்பழியையே என்பிறந்தகத்துச் சீர்தனமாய்ச் சுமந்துசென்று அக்கோமகன் நன்மனை புகுந்திடற்கு இசையேன். காதலால் அவன்பேர் தீதுற்றபின் என்னைப் பெற்றபேறு பெரியதே. என் பெண்மையை விற்ற பாவியும் ஆவேன். ஈன்றோய், உன்மகள் குமரிமூத்துச் சாகவே காண்."

இடியுண்ட நெடுஞ் சுவரெனச் சாய்ந்தனன் புஜங்கன். வந்து பயனில்லையென்று அவனுக்குக் கோபம் வரவில்லை. கரையிலாத் துக்கமே பெருகியது. "என்னடி பாவி, என்னடி பண்ணினாய்! மகளென்ற வேடத்தால் பிறந்த மறலியே! அடி பாதகி, என்மனம்கொன்ற துரோகி; கைக்கும் வாய்க்கும் இடையேதடுத்த அரக்கி, நான் பலநாள் வளர்த்து முதிர்ந்த ஆசையெல்லாம் ஒரு மூச்சினால் வேகவைத்த கொடும் பாம்பே, எனதெண்ணமெல்லாம் ஒரு நொடியில் நக்கித்துடைத்த தீயே! மகளே, அடி மகளே, பஞ்சரா, வேண்டுகின்றேன். நான், போர்முனை என்றும் பின்னிடாப் புஜங்கன், உடைவாள் கழலாமுன்னம் பகைப்படை மெய்விதிர்க்கும் ஆற்றலேன், பற்றலர்க்கு அசனியன்ன புகழினேன், நிற்பயந்த முதியோன், பஞ்சரா, நின்னடி தொழுகின்றேன். நானும் எனதுயிரும் உனதபயம் இனி," என்றான்.

என்செய்வாள்பாவம் பஞ்சரவல்லி. இருவழியிலும் இடர் உளது. பெற்றெடுத்துச் சீராட்டிப் பாராட்டிப் போற்றிய தந்தையோ தன்னடி பணிகின்றான். இவன் சிந்தனைமகிழ்வுற வாசவனை மணத்தற்கிசைந்தால், தனதரசனுக்கும் அம்மணாளனுக்கும் தனக்குமே அளப்பரிய தீங்கிழைத்ததாகும். மற்று, இக்கோமகன்காதலையும் வாளா இழப்பதோ! இழந்தபின்னும் தன்னுயிர் நிலைக்குமோ! காதலும் கடமையும் இவ்வண்ணம் மாறுபட்டால் மடந்தையவள் மீள்வதெப்படி. முடிவினில், மானமேபெரியது, காதலிற்குரிய கடமையே பெரியது, என்றுஇவ்வீரமகள் தேர்பவளாயினாள். தேர்ந்து தன் தந்தையை அருத்தியொடு தழுவி, "எந்தாய், அபலைநான் நின்சரண் எதிர்புகுந்தேன். இதுவிபரீதமுமன்று. உனதாசையைப் புண்படுத்தக் கூறினேனல்லேன். எனினும், மனச்சாக்ஷிக்கு விரோதமாய் ஒழுக இயலாவகை என்னை வளர்த்துவந்த பெருமை நினதேயன்றோ. வாசவன் மீது எனக்குள அன்பின் ஆழத்தைத் தேர்ந்து நீ ஆட்டிவைக்கும் விதமெல்லாம் நான் ஆடுவேன் என்று எண்ணினாய். அக்காதலின் உயர்ச்சியை நீ கண்டிலாய். எனது மெய்யையும் உனது புகழையும் அம்செம்மலின் பெருமையும் ஒருங்கே காக்க நானின்றே என்காதலைக் கடன்இறுத்து விடுகின்றேன். நீ மண்ணரசிழந்தாய், என் மணமாளும் கோமகனை நானிழந்தேன்............இவ்விழவில்தானே நீ தந்தை யென்பதும் நான் மகளென்பதும் தக்க ஆக வேண்டும்," என்று இரங்கினாள்.

"பஞ்சரா, சொல்வதை நினைத்துச்சொல். நினக்கும் பயனற்று எனக்கும் பயனற்று நீ கொண்டாடும் குறிசிற்கும் பயனற்று அவரவர் மனதைப் பழுதுபடுத்தும் உனது அறிவிலாச் செய்கைக்கு நான் இடந்தரேன். நானே பணிந்திரந்தும் இரங்கவில்லை நீ, இயற்கை கடந்த மகள். படையொருங்கு மேல்

வருங்கால் முன்னின்று மார்கொடுக்கும் நானே ஏ, சிறுமி, உனக்கஞ்சியே எடுத்தகருமத்தைக் கைவிடப் போகின்றேன். பஞ்சரா, எனது பகையை நீ இவ்வண்ணம் வலிந்து, தேடிக்கொள்வதால்......"

"ஐய, ஒன்று நீ முன் முடிவுரையாகக் கூறினாய். ஆனால் அது முடிவுரை யாகாதது இப்பொழுது தெளிந்தாய். மற்று, ஈண்டு யான் கூறிய ஒன்றே மெய்யான முடிவுரை. நான் கோமகனை மணம்புரியேன்," என்று பஞ்சரவல்லி விளம்பி அவ்விடம் விட்டகன்றாள்.

நாலைந்து நாட்கள் வரையில் புஜங்கன் வகைதுறை யொன்றும் தெரியாமல் மனவாட்டமுற்று உண்டியும் ஏற்காது உடலும் இளைத்துத் தன் வீட்டினுள்ளேயே கிடந்தான். பிறகு மெள்ளமெள்ள அவனுக்கு ஓர் உபாயம் தோன்றியது. பஞ்சரவல்லியை அவள் மாளிகையின் மேன்மாடத்தறையில் சிறை செய்துவிட்டுத் தன்னரசனிடம் போய் அவளது விவாகத்திற்கும் தன் மகுடாபிஷேகத்திற்கும் ஏற்றன திட்டம் செய்தனன். ஏமாங்கத தேயத்தின் தென்பாகத்திற்கு வேதபுரியைத் தலைநகராக்கி அங்குப் புஜங்கனுக்குப் பட்டம் கட்டுவதென்றும், அதற்கு அடுத்த திங்களில் இளவரசனுக்கும் பஞ்சரவல்லிக்கும் கடிமணம் நடத்திவைப்பதென்றும் நிச்சயம் செய்தனர். சிங்கமுகன் தன் நாட்டை இருபாகமாகப் பிரித்து எல்லை நிறுவி வேதபுரியில் கோட்டை கொத்தள மாடமாளிகை கூடகோபுரங்கள் அமைத்தற்குத் தக்க சிற்பிகளையும், அந்நகர் காப்பதற்கு ஒரு சிறு படைப் பிரிவும் அனுப்பி வைத்தான். மணவினைக் குரியகருமங்களும் செவ்வனே செய்துவரப்பெற்றன.

இம்மணத்தைப் பஞ்சரவல்லி அறவே மறுத்துளள் என்பதைப் புஜங்கன் யாரிடத்தும் வாய்திறந்ததில்லை. இந்தஇரகசியத்தை மறைத்துத் தான் பட்டமொன்று கட்டிக்கொண்டுவிட்டால் பிறகு எதுதான் ஏப்படித் தான் போனால்தான் என்னதான் என்பதுதான் அவன் கருத்து. "மணம்பொருந்த மறுக்கின்றாள் என்மகள். நான்என்னசெய்வேன். நின்மகன்பால்அவள்எப்பிழை கண்டாளோ, யாதோ' என்று பட்டத்திற்குப் பின் சிங்கமுகனிடம்சொல்லிவிடலாமல்லவா? சிங்கமுகன் உயரிய குணமுடையவன். வதுவையோ நேராத குற்றம் என்மேல் சாராது, ஆகையால் கொடுத்தநாட்டை மீண்டும் கேளாது போகட்டுமென்று நான் பற்றிய பிடிக்கே விட்டிடுதலும் கூடும். இவள் இசைந்ததில்லையென்பது முன்னமேயே அறிந்திருந்தும் அதை யொளித்து வஞ்சனையால் நான் விவகரித்தது சிங்கமுகனுக்கு எவ்வாறு தெரியவரப் போகின்றது! இச்செய்தி வெளியாகாமல் தடுப்பதற்காகவே பஞ்சரவல்லியைஎங்கும் செல்லவிடாமல்,யாருடனும் பேசவிடாமல் அவளறையிலேயே சிறைப்புகுத்திக் காவலும் வைத்திருக்கின்றேனே. மற்று, எவ்வகையிலேனும் இம்மோசந்தான் அறியலாகி அரசன் 'எது கருதி நானுனக்கு நாடுதந்தேனோ அது நேராததால், கொடுத்த நாட்டைப் புஜங்கா, திருப்பிக்கொடுத்துவிடு,' என்று கேட்பினுந்தான் என்ன? 'கொடேன் ஐய, செய்வதைச்செய்' என்றுவிட்டாலோ! போர்தானே விளையும்! என் சேனையுமுளது, நானுமிருக்கின்றேன். இக்கூரியவாளும் கையிலுண்டு. போரினிடை எனதாற்றல் பெறுக்காது. வெற்றியும் எனதே. வஞ்சனையால் பறித்த நாடேனும் அதைத் தோள்வலியால் காக்கும் திறனற்றுப் போனதில்லை," என்று இன்னபல புஜங்கன் தன் குற்றமுள்ள நெஞ்சினில் பன்முறை யெண்ணி நாழி யொவ்வொன்றும் ஒவ்வொருயுகமாய் இதற்கும் அவன் முடிசூடுதற்கும் இடையில் கிடந்த காலத்தைக் கழிக்கல் ஆயினன்.

வாசவனுக்கும் நாட்கள் தாமதமாகவே கழிதல் இயற்கை. புஜங்கனைத் தன்மாதுலன் என்றுஅழைத்த தின்முதல் இவன் பஞ்சரவல்லியைப் பார்த்ததில்லை. மணவினை முடியும்வரையில் காதலரிருவரும் நெருங்கிப்பழகுதல் தக்கதன்றெனச் சொல்லிப் புஜங்கன் தடுத்துவிட்டான். தன்பால் தூதுபோகிய தோழியர் சிலதினங்களாய் வாராமைகண்டு வருந்தினனேனும் பஞ்சரவல்லியின் அன்பையும் அவள் தந்தைசொன்ன வார்த்தையையும்வாசவன் அயிர்த்திலன். அரசின்ஒரு பாதி தன்பொருட்டு அன்னியனுக்கு அளிக்க இசைந்தஅரசனது பெருந்தன்மையி லீடுபட்டவனாகிப் 'புத்திரனாய்ப் பிறந்த நான் அன்னவற்கு என்னவிதத்தில் கைம்மாறு ஆற்றுதற்குளது' என்றெண்ணி, புஜங்கன் சொன்னவண்ணம் தந்தையும், "கடிமணம் நிகழும்வரையில் நின்காதலியைத் தனியிடம் நாடுதற்கு முயலேல்' என விதித்திருந்த விதிக்கடங்கி, இளவலும் பஞ்சரவல்லியை இரகசியமாய்ச் சந்திக்கக் கருவு நூலேணிபோன்ற சாதனங்கள் தேடினனல்லன்.

கூட்டினில் பட்ட கிளிபோல் வருந்திய பஞ்சரவல்லியோ தன்னைப் புஜங்கன் காவலுட்படுத்திய கருமத்தின் காரணத்தைத் தேர்ந்திட இயலாது திகைப்புற்றாள். இவள் வதிந்துள மாளிகையைச் சூழ்ந்து அகன்றதோர் நந்தவன முண்டு. அதற்கப்பால் உயர்ந்ததோர் மதிலும் நாற்புறமும் வளைந்திருந்தது. இதனால் வெளியுலகத்திறகும் இவளுக்கும் தொடர்பற்றுப் போகவே, காட்சியாலும் கேள்வியாலும் புறத்தே நடைபெறுமவற்றை உணர்ந்திலள். காவலாளரும் உண்டிகொணருந் தாதியரும் எவ்வளவு வினவினும் இரக்கமின்றி மோனம் சாதித்துவிட்டனர். தன்னை இவ்விதம் வேதனைசெய்து விவாகத்திற்கிணங்க எண்ணினனோபுஜங்கன் என்று முதலில்நினைத்தாள். ஆனால் சிலகாலம் கழிந்தபின் சந்தேகத்திற்கு இடமான சில குறிகள் தோன்றின. வீதியில் வள்ளுவன் அரசயானையின் தலையில் மணிமுரசேற்றியறைந்தனனாய் ஒருநாள் சென்றான். அவன் கூறியது இவள்செவிக்கு எட்டவில்லையானாலும் சாற்றியது மணமுரசென்பது நன்றாய் உணர்ந்தாள். இதற்கேற்ப, மறுதினத்திலிருந்து அந்நகருளோர் தேரொடும் பரியொடும் யானையொடும் மணவிழாக் கோலந்தாங்கித் திரண்டெழுவதையும் கண்டனள். ஒப்பற்ற தந்தையின் தந்திரம் தெளிந்தவளும் ஆயினள். தூய்மையே தாங்கிய தனது அன்னையும் இக்கபட நாடகத்திற்குக் கைதந்தனளோ என்று வருந்தினளாய் வாட்டமெய்திப் பின் வாசவற்கு இவ்வஞ்சகச் சூழ்ச்சியை வெளிப்படுத்துமாறு என்னெனச் சிந்திக்கப் புகுந்தனள்.

புஜங்கனது பொய்யைத் தடுப்பதற்குப் பஞ்சரவல்லிக்கு மனம் அன்றி வேறு சாதனம் இல்லாததால் முயற்சியற்று அவள் திகைத்திடும் நாள் ஒருநாள் மாலைப்போது, தனது உளம் விட்டகலாதமர்ந்த கோக்குரிசில் வாசவனை கடகளிற்றின்மேல் அவ்வீதிவாய் உலவிவரக் கண்டாள். கண்டவுடன், 'இச்சமயம் தப்பாமல், தெய்வமே, என்னிலையும் எந்தை வினையும் இவனுக்குத் தெரிவித்திட ஒருவழி செப்பாயோ' என்றேங்கி நாற்புறமும் பார்க்கச் சுவரில் மாட்டியிருந்த குதிரைச் சம்மட்டியொன்று அவளது கண்ணிற் பட்டது. இமைக்குமுன் அதை யெடுத்து வில்லாகக் கட்டினள். மலர் மறந்த குழலினள் ஆனாலும் வழக்கம்போல் அன்றைக்கும் வண்ணமகள் வைத்திருந்த பூக்கூடையை விரைவின் ஆராய்ந்து செந்தாமை மடலொன்று எடுத்தாள். எடுத்து அதனில் தனது நகத்தினால் திருமுகம் ஒன்று எழுதிச் சிறிய கோல் ஒன்றில் கட்டி, அக்கோலின் நுனியில் முன் காதலின் பணயமாய்ப் பகிர்ந்துகொண்ட கோளரியின் கொடு உகிரை மாட்டிக் கசை நாணில் அதைப் பொருந்தவைத்து வாசவன் அவளிருந்த சாளரத்திற்கு எதிர்வருமளவும் காத்திருந்தாள். வேழமும் பையப்பைய அங்கு வந்தது. வந்ததும் பஞ்சரவல்லி முன்னாள் சிங்கத்தின்மீது எய்த குறிபோன்றே பிறழாது வில்லிலிருந்து அச்சிறுகோலை விடுத்தனள். விடுத்த அவ்வம்பு வாசவனது மார்பில்



கருத்து:-வாகுகன் கூறிய அவ்வார்த்தைகளைக் கேட்ட அந்தணன் அவனது உருவத்தை நோக்குங்கால் "இவன் நளனாயிருக்கவுங் கூடுமோ" என்ற சந்தேகத்தை யுடையவனாய்த் திரும்பி விதர்ப்பநாடுவந்து தமயந்தியினுடைய மாளிகையைச் சேர்ந்தான்.

இலக்கணம்.

சென்றவாரம், சில எழுத்துக்கள் தம்முடைய மாத்திரையினின்று குறுகி ஒலிக்கும் என்பதைப்பற்றிச் சொல்லி, ஐகாரம் தன்னைக் குறிக்கும்போது பெறுவதாகிய இரண்டுமாத்திரையைச் சொற்களில்சேர்த்து வரும்போது பெறாமல், முதலிலாயின் ஒன்றரை மாத்திரையும், இடையிலும் கடையிலும் ஒரு மாத்திரையும் பெறுவதாகின்றதையும், அவ்வாறே ஒளகாரம் மொழிக்குமுதலில் நின்று ஒன்றரை மாத்திரை பெறுவதையும் கண்டோம். ஒளகாரம் மொழிக்கு இடையிலும் கடையிலும் வருவதில்லையாகையால் இது ஐகாரத்தைப்போல் ஒரு மாத்திரைக்குக் குறுக இடமில்லை. இனி உகர இகரங்கள் தமக்கு இயற்கையாயுள்ள ஒரு மாத்திரையிலும் குறுகி ஒலிக்க நேர்வதைப் பார்ப்போம். அவ்வாறு உ என்னும் உயிர் எழுத்துக் குறுகி ஒலிக்கும்போது அதற்குக் குற்றியலுகரம் என்று பெயர். குறுகிய தன்மையையுடைய உகரம் என்பது அப்பெயரிற்கு அர்த்தம்.

உகரம் வார்த்தைக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் ஆகிய மூவிடத்திலும் வரலாம். முதலில் வரும்போது அது குறுகாது. உரம், என்ற வார்த்தையையும் அரம் என்ற வார்த்தையையும் உச்சரித்துப் பாருங்கள். அரம் என்பதன் முதலிலுள்ள அகரத்திற்கு எவ்வளவு மாத்திரை உச்சரிப்பு இருக்கின்றதோ அவ்வளவு உச்சரிப்பு உரம் என்பதின் முதலிலுள்ளஉகரத்திற்கும்இருப்பதைஉங்கள்காதுஅளந்து கொள்ளும். தனிஉயிராயில்லாமல் மெய்யெழுத்தோடு சேர்ந்த உயிர்மெய்யெழுத்து வார்த்தைக்கு முதலெழுத்தாக இருந்தாலும் அதனிலுள்ள உகரமும் (நுந்தை என்கிற ஒரே ஒரு வார்த்தையில் தவிர) குறுகாது.குதிரை, முதலை நுதல்,என்பனபோன்றசொற்களில் முதலிலுள்ள உயிர்மெய்யெழுத்தினது உகரமும் குறுகாமல் தன் ஒருமாத்திரையைப் பெற்று ஒலிப்பதைத் தேர்ந்து கொள்ளுங்கள். இடையிலே வருகின்ற உகரங்களும் குறுகா. உயிரெழுத்து வார்த்தைக்கு நடுவே வராதாகையால் உயிர்மெய்யிலுள்ள உகரத்தைத்தான் இங்கே நினைத்துக்கொள்ளவேண்டும். கடுமை பதுமை, கருடன், கழுதை, என்பன போன்ற சொற்களில் உகரம் மெய்யோடு சேர்ந்து சொல்லுக்கு நடுவே வரலாகின்றது. உயிரினுடைய மாத்திரையையே அது சேர்ந்ததாலான உயிர்மெய் எழுத்துக்கள் பெறும் என்று முன்னே சொல்லியிருகின்றேன். அதன்படி டு, து, ரு, ழு, என்னும் உயிர்மெய்யெழுத்துக்கள் ஒவ்வொரு மாத்திரைகொண்டு ஒலிப்பதை இங்கு உணர்வீர்.

எனின், உகரம் குறுகி ஒலிக்கவேண்டுமானால் அது மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் குறுகக்கூடும். மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் குறுகக்கூடும் என்றதால், அப்படி இறுதியில் வரும்போதெல்லாம் குறுகிவிடும் என்றஅர்த்தம்இல்லை. சிற்சில சமயங்களிற்றான் குறுகும்.ஆதலால் அப்படிக் குறுகுவது எப்பொழுது என்று இனிப் பார்ப்போம்.

# அப்பர்.

## 3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு.

### 1. திருவதிகைக்கு மீட்சி.

125 பக்கத் தொடர்ச்சி

வருணதேவன் திருநாவுக்கரசுநாயனாரைக் கருங்கல்லையே சிவிகையாய் ஏந்தித் திருப்பாதிரிப் புலியூரில் கடலோரத்தில் விட்ட விஷயம் முன்னே மொழியப்பட்டது. திருப்பாதிரிப் புலியூர் என்னும் திருப்பதி, கூடலூர் புதுப்பட்டணம் (Cuddalore New Town) என்னு மிடத்திலிருந்து தென்னிந்தியா இருப்புப்பாதைக்கு மேற்கே அரைமைலில் கற்சாலை மார்க்கத்தி லுள்ளது. ஞானியார் மடம் என்று பெயர் பெற்ற ஒரு மடாதீனமும் இவ்விடத்திலுண்டு. இது அப்பர் காலத்தில் சிவபக்தர்கள் நிறைந்த நகராய் விளங்கியது.

"திருந்தா வமணர்தந் தீநெறிப்பட்டுத் திகைத்துமுத்தி*
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன்"

என்னும் பாசுரத்தை நோக்கில், அப்பர் சமண்சிறையினின்று மீள்வது இந்நகரத்தாருக்கு முன்னரே தெரிந்து அவர் வருகையைக் கடற்கரையில் எதிர்பார்த்த† தொண்டர் ஊரென நாம் எண்ணலாகும். இப்பதிகத்தைக் கவனிப்போமானால், சமணநாட்டுத் துன்பங்களினின்று அப்போதே ‡ திருநாவுக்கரசு மீண்டதாகவும் காணப்படுகின்றார். இப்பதியில் அப்பர் பல $ பதிகங்கள் பாடினாராயினும் நமக்குப் பத்துப் பாசுரங்

* திருப்பாதிரிப் புலியூர்-திருவிருத்தம்—10 [இவ்வூர் திருப்பாப்புலியூர் என்று தற்காலத்தில் மருவி வழங்குகின்றது]

† இப்பதியில் சம்பந்தர் பாசுரங்களி லொன்றை நோக்குக:
மதிய மொய்த்தகதிர் போலொளிம்மணற் கானல்வாய்ப்
புதிய முத்தந்திகழ் பாதிரிப்புலி யூரெனும்
பதியில் வைக்கப் படுமெந்தை தன்பழந் தொண்டர்கள்
துதியும் கொள்வர் விதியும் செய்வர் குழகாகவே"
—சம்பந்தர், 6.

‡ விடையான் விரும்பி யென்னுள்ளத் திருந்தான்; இனி [நமக்கிங்
கடையாவவலம்; அருவினைசாரா; நமனை யஞ்சோம்;
புடையார் கமலத் தயன்போல் பவர்பா திரிப்புலியூர்
உடையான் அடிய ரடியடி யோங்கட் கரியதுண்டே?
—திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம் 3.

$மற்று மினையன வண்டமிழ் மாலைகள் பாடி வைகி
வெற்றி மழவிடை வீரட்டர் பாத மிகநினைவில்
உற்றதோர் காதலினங்கு நின்றேகி யொன்னார் புரங்கள்
செற்றவர் வாழும் திருவதிகைப்பதி சென்றடைந்தார்
—பெரியபுராணம் 135.

ளமைந்த ஒரு திருவிருத்தத் திருப்பதிகமே கிடைத்துள்ளதாம்.

இந்நகரைத் திருநாவுக்கரசு விட்டபின் இப்பதிக்கு மேற்கே நாம் ஐந்துமைல் கற்சாலை மார்க்கமாய்ச் செல்வோமாயின் தென்புறமாய்க் கருடநதித் தென்கரையில் காணும் *திருமாணிக்குழியென்னும் ஸ்தலத்தில் அப்பர் மாணிக்கவரதரையும் மாணிக்கவல்லியையும் தரிசிக்கச்சென்றார் என்றுபெரியபுராணம் கூறும். † திருஞான சம்பந்தரால் புகழ்ந்து பாடப்பெற்ற தாய் நீர்வளம் குடிவளம் நிலவளம் பொருந்திய இத்தலத்தில் அப்பர் பாடிய பதிகங்கள் நாம் பெற்றிலோம்.

இவ்விடம்விட்டுத் ‡திருத்தினைநகரென்னும் திருப்பதியிலும் சில பதிகங்கள் பாடினார். சுந்தரமூர்த்தி நாயனார் $ வியந்துபாடிய இத்தலத்தில் அப்பர் பாடிய பாடல்கள் மறைந்தனவற்றைச் சேர்ந்தவையாம். இந்த க்ஷேத்திரத்தினின்றே திருநாவுக்கரசு நாயனார் கெடில நதியைக் கடந்து திருவதிகை வீரட்டானத்திற்கு மீண்டனர். இவர் திருவதிகைக்கு வந்ததும் பலநாள் ஊரை விட்டுச் சென்ற ஒரு அரசன் மீண்டதுபோல்ஊரெங்கும் விழாக்கொண்டாடப்பட்டது. அப்பரோ தொழுத கையும் ஆநந்தக் கண்ணீர் பெருக்கும் விளங்க அந்நகருட் புகுந்து நடந்தார். சிவனடியார் திருக்கூட்டம் சூழத் திருவதிகைக் கோயிலை நணுகி "ஏழைத் திருத்தாண்டகம்" என்னும் திருப்பதிகம் பாடி மற்றும் பல பதிகங்களும் பாடி அக்கோயில் திருத்தொண்டு பல நாள் செய்தனர். இந்நாளிலே தீங்கிழைத்த பல்லவன் காடவனென்பான் சைவனாய்க் குணத்தர வீச்சரமென்னும் கோயிலை நாயனார் முன்னிலையில் திருவதிகையில் கட்டி முடித்தனன்.

## 2. தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பதிகளுக்கு யாத்திரை

திருவதிகை வீரட்டானத்தில் சிலகாலம் கழித்த பின்னர்த் திருநாவுக்கரசு திருவதிகைக் கருகிலுள்ள திருவெண்ணெய் நல்லூர் ¶ திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய திருப்பதிகளிற் சென்று தனது வளமையான தமிழ்மாலைகளைப் பாடி வணங்கினாரெனச் சேக்கிழார் கூறுகின்றார். சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொண்ட திருவெண்ணெய் நல்லூரில் திருநாவுக்கரசு பாடியபாக்கள் நமக்குக்கிடைக்கவில்லை. திருஞானசம்பந்தரும் இத்தலத்தில் பதிகம் பாடியதற்கும் அத்தாட்சியில்லை. ஆயினும் திருவாமாத்தூர், திருக்கோவலூர் இவ்விரண்டு ஸ்தலங்களிலும், சம்பந்தரும் அப்பரும்பாடிய பாடல்கள் உள. முறையே இவ்விருவர் பாடிய பதிகங்கள் ஒன்றுக்கொன்று விருத்தியுரை யென்று எண்ணத்தக்கவையாய் உண்மையான †அகத்துறவைப் போதிக்கின்றன. இத்தலநாதரைக் குறித்துப் பாடுமிடத்துச் சம்பந்தர் "ஆமாத்தூ ரம்மானைக் காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே" என்பதை விவரிப்பதுபோல் அப்பரும் "சந்தியானைச் சமாதி செய்வார் தங்கள் புந்தியானை....சிந்தியாதவர் தீவினையாளரே" என்றார். இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமானை நோக்கித் தான் காமவலையில் சிக்கி வழியறியாது ‡ புலம்பும்போது காத்தவரென்றும், குண்டரிடமிருந்து தன்னை வேறுபடுத்தியவரென்றும் பாடுவாராயினர். அப்பர் இத்தலத்தில் பாடிய திருத்தாண்டக விருத்தங்கள் அகப்பொருள் இரதம் நிறைந்து விளங்கும். திருக்கோவலூர் வீரட்டத்தில் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றே கிடைத்தது போல, திருநாவுக்கரசின் பதிகமும் ஒன்றே நமக்குக் கிடைத்தது. இப் பதிகங்களிலுள்ள பாசுரங்கள் உலகவாழ்க்கையின் இலக்கணத்தை நன்கு விளக்கும்* அவற்றுள் அப்பர் பாசுரங்கள் மானிடதேகத்தின் புறத்திலுள்ள அழுக்கும் உள்ளத்திலுள்ள அழுக்கும் இழித்துக் கூறும் $.

* நெல்லிக்குப்பம் ஸ்டேஷனலிருந்து தென்மேற்கே கரை மார்க்கமாய் 6 மைலில் திருமாணிக்குழி யிருக்கின்றது.

†அம்பனைய கண்ணுமை மடந்தையவ ளஞ்சிவெரு வச்சின [முடை
கம்பமத யானையுரி செய்தவ னூர்கருதி மேயவிடமாம்
வம்புமலி சோலைபுடை சூழமணி மாடமது நீடியழகார்
உம்பரவர் கோனகர மென்னமிக மன்னுதவி மாணி [குழியே
—திருஞான சம்பந்தர் 3.

‡ பாங்கிப்பேட்டை ஸ்டேஷனிலிருந்து நல்ல மட்சாலை மார்க்கமாய் 7 மைலில் திருத்தினைநகர் இருக்கின்றது.

$ நன்னி லடசறு சித்தமு மின்றித்
தவமுயன் றவ மாயின பேசிப்
பின்ன லார்சடை கட்டி யென்பணிந்தாற்
பெரிது நீந்துவ தரித்து நிற்க
முன்னெ லாமுழு முதலென் று
வானோர் மூர்த்தியாகிய முதலவன் றன்னைச்
செந்நெ லார்வயல் றிருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடைந்தேனே
—சுந்தரர் 7.

¶ விழுப்புரம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் 3 மைலில் திருவாமாத்தூர் இருக்கின்றது. திருக்கோவலூர் என்பது அப் பெயர்கொண்ட இருப்புப்பாதை ஸ்டேஷனிலிருந்து ஒரு மைலில் தென்மேற்கே உளது.

† i ஓதியாரணமாய நுண்பொருளன்று நால்வர் முன் [கேட்க நன்னெறி
நீதியால நீழலுரைக்கின்ற நீர்மையதென்?......6

ii நின்றுடர்த் திரைமைப் புலன்னிலை யாதவண்ண நினைந் [துளத்திடை
வென்றுடர்த் தொருபான் மடமாதைவிரும்புதலென்?......
—சம்பந்தர்.

‡ i. காமாத்தம் மெனும் கார்வலைப் பட்டுநான்
போமாத்தை யறியாது புலம்புவேன்
ஆமாத் தூரா னேயென் றழைத்தலும்
தேமாத்தின் கனிபோலத் தித்திக்குமே...... (3)

ii. குண்டர் பீலிகள் கொள்ளும் குணமிலா
மிண்ட ரோடெனை வேறுப டுத்துய்யக்
கொண்ட நாதன் குளிர்புனல் வீரட்டத்
தண்ட னூரிட மாமாத்தூர் காண்மினே... (9)
—திருவாமாத்தூர் - திருக்குறுந்தொகை.

* i கனைகொ ளிருமல் சூலைநோய் கம்பதாளி குன்மமும்
இனைய பலவு மூப்பினோ டெய்தி வந்து நலியாமுன்
பனைக ளுலவு பைம்பொழில் பழனம் சூழ்ந்தகோவலூர்
வினையை வென்றவேடத்தான்வீரட்டானஞ் சேர்துமே (4)

ii படைகொள் கூற்றம் வந்துமெய்ப்
பாசம் விட்ட போதின்கண்
இடைகொள் வாரெ மக்கிலை
யெழுக போது நெஞ்சமே (1)
—திருஞானசம்பந்தர்

$ i செத்தையேன் சிதம்ப நாயேன்
செடியனே னழுக்கு பாயும்
பொத்தையே போற்றநாளும்
புகலிட மறிய மாட்டேன் (1)



திருநாவுக்கரசு நாயனார் திருவாமாத்தூர், திருக்கோவல் வீரட்டானம் முதலிய திருப்பதிகளைத் தொழுது திருத்தூங்கானைமாடமென்னும் ¶ திருப்பெண்ணாகடத் திருப்பதியை அடைந்தார். சமணநெறியை விட்டுச் சைவராய்ப்பலஅற்புதங்கள் விளைத்தும், தன்னைச் சிவபெருமான் என்று கொண்டாரோவென்றும், தான் சிவகணத்தில் ஒருவராய்ச் சேரப் பாத்திரரோவென்றும் எண்ணி பொன்னார்திருவடிக்கொரு விண்ணப்பம் என்றெடுத்த பாசுரத்தில் தன்மேல் மூவிலைச் சூலப்பொறி *மேவவேண்டும்; இதுவே தன்னைக்காத்தற்கு அறிகுறி யாகுமென்று வேண்டினர். உடனே பரமன் திருவருளால் ஒரு சிவபூதம் மற்றொருவருக்கும் தெரியாதபடி அப்பர் திருத்தோளில் சூலக்குறியையும், இடபக்குறியையும் பொறித்தது. நாயனார் தமது திருத்தோளிலே பொறிக்கப்பட்ட சின்னங்களைக்கண்டு மனமகிழ்ந்து நமஸ்கரித்து எழுந்தார். திருஞானசம்பந்தர் இப்பதியில் நடந்த இவ்வற்புதத்தை எண்ணிப் பாடினாரோவென அவர் பதிகத்தின் முதற் பாசுரம் ‡ எண்ணச் செய்கின்றது.

திருத்தூங்கானை மாடத்திய பதிகத்தில் நமக்குக் கிடைத்துள்ள அப்பர் திருப்பாசுரங்கள் மூன்றே. இம்மூன்று பாசுரங்களும் தவப்பயனைச் சுட்டுகின்றன $. சிவசின்னங்கள் செயற்கையில் அணியாது இயற்கையில் பொறிப்படுவதே † "ஊன்றும் பிணிப்பிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கையொழியத் தவம்"பெற்றதின் இலச்சினையாகும். இவையே இப்பாசுரங்களில் காட்டப் பட்டன.

பெண்ணாகடத்துப் பெருங்கோயில் விட்டபின்னர், திருநாவுக்கரசு திருவரத்துறையென்னும் திருப்பதியின் வழியாய்த் திருமுது குன்றம்‡என்னும் விருத்தாசலமடைந்தார். அத்தலத்திலுள்ள "கருதுவார்க் காற்ற வெளியான்றன்னைக் குருமணியை......தீவினையேனறியாதே திகைத்தவாறே" எனப்புலம்பிப் பதிகம் பாடினார். இப்பதியில் பாடியபதிகங்களில் ஒன்றேயுளது. இதன் பாசுரங்கள் ஈச்வரன் அண்டசராசரங்களில் அணுக்கள்தோறும் நின்று பிரகாசிப்பது பற்பல விதங்களாய்க் காட்டுகின்றன ¶.

திருநெல்வாயி லரத்துறையில் சிவபெருமான் சம்பந்தருக்கு முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச் சின்னங்களும் கொடுத்த விஷயம், அப்பர் திருக்குறுந்தொகை இவ்விடத்திற் பாடுங்காலத்தில் ஞாபகத்திலிருந்ததுபோல் தோற்றுகின்றது $. இவ்விடத்தில் அப்பர் பாடிய திருக்குறுந்தொகைப் பதிகம் பத்தும் பாசுரங்களமைந்தது. ஒன்றே நாம் திருமுறையிற் காண்கின்றோம். இதில் கடவுளை இயற்கையிலுள்ள அரிய பதார்த்தங்கள் ஒவ்வொன்றோடும் மிக அழகாய் அப்பர் உவமைப் படுத்துகின்றார். இது

ii தலைசுமந் திருகை நாற்றித் தரணிக்கே பொறையதாகி
நிலையிலா நெஞ்சம் தன்னுள் நித்தலும் ஐவர் வேண்டும்
விலைகொடுத் தறுக்கமாட்டேன் வேண்டிற்றே வேண்டி
......யெய்த்தேன் (2)

iii தடுத்திலே னவர்தம்மைத் தத்துவத் துயர்வு நீர்மை
படுத்திலேன் பரப்பு நோக்கிப் பன்மலா பாதமுற்ற
அடுத்திலேன் சிந்தையார வார்வலித் தன்பு திண்ணம்
கொடுத்திலேன் கொடியவாநான் கோவல் வீரட்டனீரே (5)
—திருக்கோவல்வீரட்டம், திருநேரிசை.

¶ இத்தலத்தைத் திருப்பெண்ணாகடமென்றும் சொல்வர். இதற்குச் சிதம்பரம் அல்லது குற்றாலம் ஸ்டேஷன் மார்க்கமாய்ப் போகலாம்.

*(i) பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சை
யுண்டே லிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்மேற்
பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தை யுட்டூங்
கானைமாடச் சுடர்க் கொழுந்தே. (1)

(ii) கடவும் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந்திருவிர லொன்றுவைத்தாய் பனி மால்வரைபோல்
இடவம் பொறித்தென்னை யேன்றுகொள்ளா யிருஞ்சோலை [திங்கள்
தடவுங் கடந்தையுட்டூங் கானைமாடத் தென்றத்துவனே 10
—திருத்தூங்கானைமாடம்-திருவிருத்தம்.

‡ ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கையொ ழியத்தவம்
அடங்கும்மி டங்கருதி நின்றீரெல்லா
மடிகளடிநீழல் கீழாளாம் வண்ணம்
கிடங்கும்மதிலும் சுலாவி யெங்கும்
யெழுமனை கடோறு மறையின்னொலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானைமாடத் தொழுமின்களே.
—திருஞானசம்பந்தர்,

$ இப்பாசுரங்களைத் திருஞான சம்பந்தர் இத்தலத்தில் பாடிய பாசுரங்களுடன் வாசிக்க.

† திருஞானசம்பந்தர் தேவாரம்.

‡ தற்காலத்தில் ஒவ்வொரு சிவஸ்தலமும் தமிழ் நாமம் போய் வடமொழி நாமங்களே பெற்றிருக்கின்றன. மூவர் காலத்தில் வழங்கிய நாமங்கள் தமிழினவையன்றி வடமொழியால் கூறப்படவில்லையென்பது மேலோர் துணிவு. இவ்வூர் சிதம்பரத்திலிருந்து சாலைமார்க்கமாய் மேற்கே. சுமார் 36 மைலில் இருக்கின்றது.

¶ i ஊன்கருவி னுண்ணின்ற சோதி யானை
யுத்தமனைப் பத்தர்மனம் குடிகொண் டானை"
—4.

ii. துறவாதே யாக்கைத் துறந்தான் றன்னை
சோதிமுழு முதலாய் நின்றான் றன்னை
பிறவாதே யெவ்வுயிர்க்கும் தானே யாகிப்
பெண்ணினோ டாணுருவாய் நின்றான் றன்னை
மறவாதே தன்றிறமே வாழ்த்தும் தொண்டர்
மனத்தகத்தே யனவரத மன்னி நின்ற
திறவானைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்த வாறே
—திருமுதுகுன்றம்—திருத்தாண்டகம் 5

$ காழி யானைக் கனவிடை யூருமெய்
வாழி யானைவல் லோருமென் றின்னவர்
ஆழி யான்பிரமற்கு மரத்துறை
ஊழி யானைக் கண்டீர்நாந் தொழுவதே
—திரு அரத்துறை-திருக்குறுந்தொகை 9.

இத்துடன் சம்பந்தர் பாசுரம் ஒன்றையும் நோக்குக:-
"செழுந்தண் மால்வரை யெடுத்த
செறுவலி யிராவண னலற
அழுந்த வூன்றிய விரலான்
போற்றி யென்பார்க் கல்லதருளான்
கொழுங்க னிசுமந் துந்திக்
குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அழுந்தும் சோலை நெல்வாயில்
அரத்துறை யடிகடம் மருளே" சம்பந்தர் 8

மற்றும் அப்பர் 10-வது பாசுரத்தையுங்காண்க,
கலையொப் பானை கற்றார்க்கோ ரமுதினை
மலையொப் பானை மணிமுடி யூன்றிய

நிவா நதிக்கரையில் பக்தர் பலர் நிறைந்த †ஊரெனச் சம்பந்தர் திருவாக்கா லறிகின்றோம்.

அலையோப் பானை யாத்துறை மேவிய
கிலையொப் பானைக் கண்டீர்நாந் தொழுவதே'
—திரு அரத்துறை-திருக்குறுந்தொகை 10

† திரு அரத்துறை என்றும் திருநெல்வாயிலரத்துறை யென்றும் இப்பதியைக் கூறுவர்.

மேற்கண்ட நேமத்திலிருந்து ஏழுமைலிலுள்ளது விருத்தாசலம் என்னும் திருமுதுகுன்றம். இதில் சம்பந்தர் பதிகங்கள் ஏழு, திருநாவுக்கரசு திருத்தாண்டகம் ஒன்று, சுந்தரர் பதிகம் ஒன்று, திருமுறைகளில் உள. இத்தலத்தை முத்தாறு வலஞ் செய்யும். இவ்வாற்றில் மூங்கில் முத்துக்கள் விசேடமாம்.

# குலசேகரர்.

## ஊசியின் காதில் ஒட்டை நுழைந்தது.

எறும்பு மொய்ப்பதேன்?

தமிழ்மக்களது உள்ளத்தினை ஒருங்கே கவர்வன இவை என அறிந்தோம். இவ்வாறு மக்கள் மனதைக் கவர்தற்கு அப்பாடல்களில் ஏதேனும் மறைபொருள் இருத்தல் வேண்டும்; தனிச்சுவை ததும்புதல் வேண்டும். அந்நயத்தை நாம்நாடிச் செல்லவேண்டாமா? சிவத்தைப்பேணும் சீரியதவமும் திருமாலுக் கடிமைசெய்யும் திறனும் தென்னாட்டில்வழங்கிவருவது திருமுறையும் நாலாயிரமும் சிறப்புற்றிருப்பதால் எனச் சொல்லவும் வேண்டுமா? கடவுளைப் பற்றிப் பற்றெழுந்தாலும், கடவுள் கரும்பல்லாது கல்லாய் இருப்பின் பல்லொடியக் கடிப்பார் இல்லையே! அதனை விரும்பி யுண்ணப்புகுவார் உலகில் இல்லையே! இனிப்புள்ள இடத்தே எறும்பு மொய்க்கின்றது? நாலாயிரத்தில் நயம் இருப்பதால்தான் நாலுபேரும் பாடி யாடுகின்றனர். கடவுளைப்பற்றி நாலாயிரத்தில் பற்றுப் பிறந்தது என்றோம். வேறு ஆயிரம் நூல்கள் இருப்பவும் நாலாயிரத்தில் மக்களது உள்ளம் பள்ளமடையாகப் பாய்ந்தது தமிழ்த் திருமறையில் உள்ள நூனயத்தால் என்பது தெளிவாகின்றது. அந்நூல்களை ஓதும்போது ஆண்டவனை அறிந்தவர்போல ஆகின்றோம். கடவுளைக் காணலாகும் வகையில் இப்பெரியார்கள் கண்டறிந்தார்கள் என்பதையும், கண்டறிந்தபடி பாடிநம்மையும் காணச் செய்கின்றார்கள் என்பதையும் இவர்கள் பாடிய ஒவ்வோர் அடியும் விளக்குகின்றது.

135 பக்கத் தொடர்ச்சி

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்மணமும் இன்சுவையும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்
முகிழிளஞ் சிறு தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண்டு அடிப்பதற்கு என்கு நிலையும்
வெண்டயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சிநோக்கும் அந்நோக்கும் அணிகொள்
செஞ்சிறு வாய் நெளிப்பதவும்
தொழுகையும் இவைகண்ட அசோதை தொல்லை
இன்பத்(து) இறுதி கண்டாளே.

என்று பாடிய பெரியோர்கள் கடவுளைக்கண்டு அன்பு வெறி கொண்டவர்கள் கல்லையும் செம்பையும் கண்டவர் அல்லர்; கட்டுக்கதையைக் கனவாகக் கண்டவரும் அல்லர். கல்லிலும் செம்பிலும் கண்டதிலும் காணாததிலும் கட்டுக்கதையிலும் கனவிலும் எங்கும் நிறைந்த இறைவனைக் கண்டு இன்பவெள்ளத் தழுந்தியவர் ஆவர். அவர்கள் பாடலைப் படிக்கப்படிக்க அந்தப் பித்தும் வெறியும் நம்தலைக் கேறிவிடுகின்றன.

காட்டிலோர் கைகாட்டி.

திருமுறையைவிடநாலாயிரத்திற்கோர்ஏற்றமுண்டு. அது பின்னவர் தந்ததொன்றேயன்றி நூலில் இல்லை. திருமாலின் திருவடியார்கள் தமது கொள்கைகள் அனைத்தும் நாலாயிரத்தினின்றும் வடித்தெடுத்துத் திரட்டப்பட்டன என்று புகழ்ந்து, நாலாயிரத்திற்கு விரிவுரை எழுதப் புகுந்தனர். இராமாநுஜர் தமது கொள்கையை விளக்கக் கீதைக்கும் வேதாந்த சூத்திரத்திற்கும் விரிவுரை எழுதியதோடமையாது, திருவாய்மொழிக்கும் விரிவுரை எழுதவேண்டினார். தம்மை வழிபட்டுவந்த எம்பார் என்பாரை எழுதவும் கட்டளையிட்டார். பின்வந்த பெரியார்களும் அவரைப் பின்பற்றி நாலாயிரத்திற்கும் நல்லதோர் உரை எழுதி உதவினர். சிவனடியாரோ, திருமுறைகளை உணர்ந்து பாடி யாடினர். தம்மை வந்தடைந்தோருக்கு உரையகலம் கூறினர். விரிவுரையாக எழுதிவைத்திலர். இவ்வகையில்தான் நாலாயிரத்திற்கு ஓர் ஏற்றம் உண்டு என்றோமேயன்றி வேறு வகையால் அன்று. உரை பயின்றநூலினை உணர்ந்து ஓதுவதுஒருசிறிதுஎளிதேயாகும். ஐயந்திரிபு அறத் திருமுறைகளை உரையின்றியே அறிந்தோதுவார் இல்லாமல் இல்லை. ஆனால் அத்தகையோர் ஒருசிலரே. தமிழ் அறிவில் நொண்டிகளாய்க்கிடக்கும் நாம் உரை என்னும் ஓர் ஊன்றுகோல் ஊன்றிச் சென்றால்தான் நாலாயிரத்திற்குள் நன்கு நடந்து செல்லமுடியும். இதுவே காட்டிலுள்ளதொரு கைகாட்டிமரம். அப்போதுதான் அது கண்தெரிந்த வழியாகின்றது. நாலாயிரத்தை ஓதியுணர்ந்த பின்னர்த் திருமுறைகளைப் பாடியறிதல்எளிதாகலாம். ஏறக்குறைய ஒரேகாலத் தெழுந்தவையாதலின்சொன்னுக்கும் பொருளுக்கும் ஒரு படித்தாகவே இருக்கின்றன. ஒன்றையறிந்தால் மற்றொன்றை அறிதல் ஒன்றும் அரிதன்று. நாலாயிரத்தில் நடந்து சென்றவன் திருமுறையில் சென்று திரியலாம்.



பலநாள்திருடன் ஒருநாள் அகப்பட்டானா?

இவ்வாறு இந்த நாலாயிரம் போற்றிப் புகழப்படுவது இன்றல்ல நேற்றல்ல. இப்போதைக்கு ஒன்பது நூற்றாண்டிற்கு முன்னிருந்த இராமாநுஜர் காலத்திலேயே தொகுக்கப்பட்டுத் திருமாலின் திருமறையாயது இந்நூல். அவருக்குச் சில நூற்றாண்டுகள் முன்னிருந்த நாதமுனியடிகளது காலத்திலேயே இவ்வுயர்நிலையடைந்த தெனலாம். ஆழ்வார்களை மறைமொழி ஓதிய நிறைமொழி மாந்தரோடு ஒக்கவைத்தெண்ணி அவர்களது பாடலையும் ஆரிடம் (ரிஷிகளது வாக்கு) என்று புகழ்வர் உரையாசிரியர்கள் அனைவரும். ஆதலால் இஃதோர் ஆயிரங்காலத்துப் பயிர். எத்துணையோ புயற்காற்று; எவ்வளவோ பெருவெள்ளம், எத்தனையோ பேரிடி; எத்தனையோ அரசர்; எத்தனையோ கொள்கை இவற்றிற்கெல்லாம் அசையாதும் அழியாதும் மாறாத இளமையோடு இன்றெழுந்த காலைச்செவ்வானம் போலக் கண்கவர் வனப்பொடு புத்தம்புதிதாகப் பொலிந்துதோன்றி உலகினரை எழுப்பிக் கடவுளாம் கதிரவனைக் காட்டிவிடுகின்றது. "ஒருசிலரை எந்நாளும் ஏய்க்கலாம்; எல்லோரையும் ஒருசில நாள் ஏய்க்கலாம்; எல்லோரையும்எந்நாளும் ஏய்த்தல்இயலாது" என்று அமெரிக்கா தேசத்து லின்கன் என்ற பெரியார் எடுத்துரைத்தார். "பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்" என்று நமது பாட்டி பாடுகின்றாள். இஃது எல்லோருக்கும் ஒப்ப முடிந்த உண்மை. ஆகவே எல்லாராலும் எந்நாளும் போற்றிப் புகழப்படும் நாலாயிரத்தில் ஏமாற்றம் ஒன்றுமில்லை. உண்மையிலேயே உயர்ந்ததொரு நூலாதலின் உலகத்தோரால் உயர்வாக எண்ணப்படுகின்றது. கடவுளைக் கண்டதைக் கறந்தபால் கறந்தபடி கூறும் நூல் இதுவாகும்.

இரண்டாயிரம் காலத்துப் பயிர்.

நாலாயிரம் பாடிய ஆழ்வார்களுள் மிகப் பழையவர்களில் குலசேகரர் ஒருவர். இவர் பாடியதே பெருமாள் திருமொழி. இதனை ஆயிரத்திற்கும் மேலிருந்த இரண்டாயிரம்காலத்துப் பயிர் எனலாம். சங்கத்திருந்த பண்டைத் தண்டமிழ்ப் புலவர்களில் இவர் ஒருவர் எனலாம். பழைமை பற்றி இத்திருமொழியை ஆராய்வது ஏற்றதே ஆகும். சங்ககாலத்தவர் என்றோம். அது தவறாயின் சங்ககாலத்தை அடுத்திருந்தவர் என்போம். அதற்கும் பிற்காலத்திருந்தவர் என்று பேச இடமில்லை. ஆழ்வார்களில் சிலரை முன்னூழியில் வாழ்ந்தவர்களாகக் குருபரம்பரை என்ற நூல் புகழும்.

பொய்கைபூ தன்பேயான் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான் —வையகம் எண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப்பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு

என ஆழ்வார்கள் இருந்தகாலத்தைப் பற்றிக் கோவை செய்து பாடுகிறார் பிள்ளைபெருமாள் ஐயங்கார். குருபரம்பரை கூறும் காலம் தவறாயினும் இந்தக் கோவைசெய்த முறை தவறாயிருக்க வேண்டுவதில்லை. பொய்கை பூதன் பேயார் என்ற முதலாழ்வார்கள் பொய்கையாரால் பாடப்பெற்ற கோச்செங்கணான் காலத்தவர்கள் ஆதல்வேண்டும். சொன்னவண்ணம் செய்யும் பெருமாளது வெஃகா எனும் திருக்கோயில் திருமழிசையாழ்வாராலும் அவரை வழிபட்ட கணிகண்ணனாலும் பேர்பெற்றது. அத்திருவெஃகாவினைப் புகழ்கின்ற உருத்திரங்கண்ணனார் தொண்டைமான் இளந்திரையனைப் பற்றியே அப்பாடல் பாடுகின்றார். ஆதலின் அவருக்கு முற்பட்டவரே திருமழிசை ஆழ்வார் என்பது துணிவு. திருமழிசையாழ்வாருக்குப் பின்வந்தவர் நம்மாழ்வார். இவரொடு உடன்வாழ்ந்து வழிபட்டவர் மதுரகவி. நம்மாழ்வாருக்குப் பிந்தியவர் குலசேகரர். திருமங்கைமன்னர் ஆழ்வார்களில் கடையாயினவர். அவர் பல்லவர்களைப் புகழ்தலின் பல்லவர் காலத்திலே வாழ்ந்தவர் ஆதல் வேண்டும். ஏழாம் நூற்றாண்டினர் என்று அறுதியிட்டும் கூறலாம். திருமங்கைமன்னருக்கும், குலசேகரர்க்கும் இடையேபெரியாழ்வாரும், சூடிக்கொடுத்த நாச்சியாரும், தொண்டரடிப்பொடியும், திருப்பாணாழ்வாரும், திருமாலுக் கடிமையராய்த் திகழ்ந்தனர். ஆதலின் பல்லவர் ஆளத்தொடங்கியதற்கு முந்தியே குலசேகரர் வாழ்ந்தவராதல் வேண்டும். நமது ஆழ்வார் தம்மைக் "கோழிக்கோன் கூடலர்கோன் வஞ்சிக்கோன் கொங்கர்கோன்" என்று புகழ்ந்து பாராட்டுதலின் இவர் சேர சோழ பாண்டிய நாடுகளை ஒருங்காண்ட பேரரசர் என்பது தெளிவாகின்றது. இவர் மலையாளத்திற் பிறந்தும் தமிழில் பாடுவதால் மலையாளம் தனிமொழியாகப் பிரிவதற்கு முன்னரே வாழ்ந்தவராதல் வேண்டும். அன்றியும் ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ஓர் கல்லேடு "தேட்டருந்திறல் தேனினை" எனவரும் இவரது திருமொழியைத் திருக்கோயிலில் பாடுவதற்காக கட்டளை ஏற்படுத்துகின்றது. இவை நடப்பதற்கெல்லாம் பலநூற்றாண்டுகள் முன்னதாக இவர் வாழ்ந்திருத்தல் வேண்டும். பல்லவர் தமிழ்நாட்டை ஆண்ட நாளில் இவரைப்போலத் தமிழ்நாடு முழுவதையும் வேறொருவர் ஆண்டுவந்திருத்தல் இயலாதென்றாம். சேரன்செங்குட்டுவன் காலந்தொட்டுச் சேரர்கள் தமிழ்நாட்டிலும் வடநாட்டிலும் சிறப்பொடுவிளங்கிய கதையைச் சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்தில் படிக்கின்றோம். சேரன்செங்குட்டுவனுக்குச் சிறிது பிந்தியவர்போலும் நமது குலசேகரர்.

189043

பெருமாள்கதை

கோளோத்பத்தி என்பது சேரநாட்டைப்பற்றி வழங்கிவரும் கதையைக் கூறுவதொருநூல். சேரநாடு முதன்முதலில் நான்குபிரிவாகப்பிரிக்கப்பட்டு, நான்கு கழகத்தினரால் ஆளப்பட்டு வந்ததென்றும், அந்த நான்கு கழகத்தினரும் ஒன்றுசேர்ந்து தம்மையாள ஒரு நம்பியைத் தேர்ந்தெடுத்தனர் என்றும், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பிகள் கொடுங்கோன் மன்னராய்க் கொடுமைசெய்து வந்தமையால் கழகத்தார் அனைவரும் ஒருங்குகூடி வேறுநாட்டில் மேன்மை பெற்று விளங்கிய அரசரை வரவழைத்துத் தமக்கு அரசர் ஆக்கிக்கொண்டார் என்றும் கூறும். இவ்வாறு அரசர்களாக வரவழைக்கப்பட்டவர்கள் பன்னிரண்டாண்டிற்குமேல் அரசராக ஆளுதல் கூடாது என்று ஓர் கட்டுப்பாடு ஏற்படுத்திக்கொண்டனராம். அத்தகைய கட்டுப்பாடு ஒன்று இருந்தால்தான் அரசர்கள் குடிகளது நன்மையைக் கருதி ஆளமுடியும் என்று அந்நாட்டினர்கள் கருதினார்களாம். இவ்வாறு பன்னிரண்டாண்டிற் கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர்களுக்குப் பெருமாள்கள் என்ற சிறப்புப்பெயர் அளிக்கப்பட்டது. அத்தகையோர் இருபத்தைந்து பெருமாள்கள் சேரநாட்டை ஆண்டனராம். அவர்களில் குலசேகரர் என்ற பெயருடையவர்கள் இருவராம். முன்னவர் கி. பி. 293ல் இருந்து 305வரை அரசாண்

டதாக அந்நூலிலிருந்து புலனாகின்றது. பின்னவர் கி. பி. 450ல் இருந்து 462வரை அரசாண்டவர் என வெளியாகின்றது. சங்ககாலத்திற்குப்பின் தமிழ்நாட்டில் அமைதிகுறையவே, வல்லோன்வெட்டியதே வாய்க்காலாயிற்று. வெற்றி பெற்றவனையே வேந்தனென மேலோரும்போற்றிப்புகழ்ந்தனர். அத்தகையாரில்ஒருவராகிய குலசேகரர் சேரசோழ பாண்டிய நாடு மூன்றையும்ஆள்வது இயல்புதானே. குருபரம்பரை கூறுகிறபடி குலசேகரர் தமதுதந்தையார்உயிரோடுவாழும்போதே அரசாள வந்தார்; குலசேகரர் உயிர்வாழும்போதே அவரது திருமகனார் சேரநாட்டை ஆளத்தொடங்கினார். இவ்வாறு பன்னிரண்டாண்டு வந்த அரசர்கதையை வற்புறுத்துகின்றது போலும். ஈதோடு நில்லாது மேலுஞ் சென்று நாம் ஆராய்ச்சிசெய்து முடிவு கட்டுவது குருடனுக்கு ஊமை வழிகாட்டிய கதையாக முடியும். அஃது எவ்வாறாயினும், குறைந்தது கி. பி. 462-க்குப் பிற்பட்டவர் என்று சொல்ல முடியாதன்றோ.

பெரிய பெருமாளா? சேரர்பெருமாளா?

இந்தப் பெருமாள்கதையால் "பெருமாள் திருமொழி" என்பதன் பொருளும் நன்கு விளங்குகின்றது. குலசேகரர் பெரிய பெருமாளாகிய இராமரிடத்தில் ஈடுபட்டு இராமரைப்பற்றிய பாடல்கள் பாடியிருப்பதால் இவருடைய திருமொழிக்குப் பெருமாள் திருமொழி எனப்பெயர் வழங்கலாயிற்று என ஒரு சாரார்கூறுவர். அஃது அத்துணைப் பொருத்தமின்மை எவருக்கும் புலனாகும். பெருமாள் திருமொழியில் பெரியபெருமாளும் வருகிறார், கண்ணனும் வருகிறார்; அடியாரும் வருகிறார்கள். அரங்கனும் வித்துவக் கோட்டம்மானும் திகழ்கின்றார்கள். குலசேகரர்க்கு மேலே எடுத்துக்காட்டியபடி பெருமாள் என்ற சிறப்புப்பெயர் உண்மையால் அவர்பாடிய திருமொழிக்கும் பெருமாள்திருமொழி என்பது பெயர் ஆயிற்று. பெருமாள் திருமொழிக்கு உரை எழுதிய பெரியவாச்சான்பிள்ளை இதை உணர்ந்தவர், ஆதலின் குலசேகரரைப் பெருமாள் என்றும் ஸ்ரீகுலசேகரப்பெருமாள் என்றும் எவ்விடத்தும் எடுத்துக்கூறிப்பொருள் எழுதிப் போகின்றார். எனவே பெரியவாச்சான்பிள்ளை உரையும் ஒருவாறு கோளோத்பத்தி கூறும் பெருமாள் கதையை வற்புறுத்துகின்றதெனலாம்.

ஊசியின்காதில் ஒட்டைபுகுதல்

பெருமாள் திருமொழி இரண்டாயிரம் காலத்துப் பயிர் என்பதொன்றாலேயே சிறப்பினை அடையவில்லை. ஆழ்வார்களில் இவரும் திருமங்கைமன்னருமே அரசர் ஆவர். திருமங்கை மன்னரோ குறும்பொறை நாடர். இவரோ தமிழ்நாட்டில் தனிக்கோலோச்சிய அரசர்க்கரசர். "ஊசியின்காதில் ஒட்டைபுகுந்தாலும்புகுமேயொழியச் செல்வவான் துறக்கம்புகுவதில்லை." என்றார் ஏசுநாதர். பொருளுள்ளார்க்கு அவ்வுலகமில்லை, என்பது அவர் துணிவு. அப்பொய்யாமொழியினைத் தம்மளவில் பொய்மொழியாக்கியவர் நமது ஆழ்வாரேஆகும். ஒன்றுமில்லாது வருந்துபவன் உலகைமறந்து கடவுளை வேண்டுவது இயல்பே. வேறுவழியின்றி அவ்வழியில் இன்பம் பெறுகின்றான். எல்லாம் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கின்ற அரசர்க்கரசன் அவற்றைத் துறந்து அடியாருக்கடியனாய் ஆண்டவனை வேண்டுதல் அருமையினும் அருமை. அவ்வருமை இவருக்கு எளியதாயிற்று. கடவுளைத்தொழுவது ஒரு பெரிதல்ல. அடியவரிடத்தும் அன்பு கொண்டொழுகவேண்டும் என்று முதன்முதல் வற்புறுத்தியவர் இவரேயாவர். அனைவர்க்கும் அரசனானவர், அடியவர் அனைவர்க்கும் அடியவர் ஆதல் என்றால் வேறொரு பிறப்புப் பிறந்ததேபோலும் எனலாம். ப்ளேடோ என்ற மேனாட்டறிஞர் மெய்யுணர்ந்த துறவி. ஆளுகின்ற நாடே திருநாடு என்று கனா கண்டார். அக்கனவிற் கண்ட கட்டுக்கதையை நனவில் மெய்யாக்கியவர்களில் நமது ஆழ்வாரும் ஒருவர். எனவே ஆண்டிப்பாட்டிலும் அரசன் பாட்டிற்கு ஏற்றமுண்டு. ஆதலின் அதனை ஆராய்வோம்.

# கம்பனோ வம்பனோ?

காலஞ்சென்ற பேரறிஞர் திருமணம் - செல்வக் கேசவராய முதலியாரவர்கள் "தமிழுக்குக் கதியாவார் இருவர்; அவருள் கஃகானைக்கம்பனென்றும், திஃகானைத் திருவள்ளுவரென்றுங் கூறுப" என நயம் பாராட்டி மொழியப்பட்டகவியரசர் கம்பநாடர் வான்மீகியைத் தழுவிப் பாடிய இராமசரிதத்தை மேலோட்டமாக நோக்குங்கால் கம்பர் வம்பரோ எனக் கருத நேரிடுகின்றது. எடுத்துக்காட்டாக, அகலிகை வரலாற்றை முதனூலுக்கு முரணாகக் கம்பர் கூறியிருக்கும் திறனென்று நோக்கின் அவர் வம்பரே! பெருவம்பரே! என நினைக்கவேண்டியுளது. கோசிக முனிவர் இராமபிரானிடத்து அகலிகையைக் காணு முன்னரே அவளுடைய தாழ்நிலைமையைக் கூறுவதாக வுரைப்பர் வான்மீகர். கம்பரோ நேரிலேயே கூறுவதாக மாற்றுகிறார். அம்மட்டோ? இக்கம்பரே, "மனையின் மாட்சியை யழித்திழி மாதவப் பன்னி" என அவ்வமையை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். இக்கருத்தொடு நின்றிருப்பின் நேரிதே. விசுவாமித்திரர் இராமரிடத்து அகலிகையின் வரலாற்றைக் கூறுங்கால் "புதுமண மதுவின் தேறல், ஒக்கவுண் டிருத்தலோடும் உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும் தக்கதன்றென்ன வோராள் தாழ்ந்தனள்" எனக் கூறி, கோதமரிடத்து அகல்யையை யேற்றுக்கொள்ளுமாறு வேண்டும்பொழுது "நெஞ்சினாற் பிழைப்பிலாளை நீயழைத்திடுதி" என மொழிவதாக அறிவிக்கின்றார் நம் கவியரசர்.

"கணவனல்லனென மனதறியவறிந்தும் தாழ்ந்தனள்" எனக்கூறிய கோசிகனே "நெஞ்சினாற் பிழைப்பிலாதாள்" என மொழிகின்றான். அதற்கியைய "மனையின் மாட்சியை யழித்திழி மாதவப் பன்னி" என அறிவித்த கம்பரே பின்னர் "மாசறு கற்பின் மிக்க அணங்கு," என நவில்கின்றார். ஆ! முன்னுக்குப் பின் எத்துணை முரண்? சில அறிஞரும் கம்பர் தவறினரென்றே முடிவு கட்டியுள்ளார். அதனால் கல்விக் கடலாய கம்பர் இத்துணைத் தெளிய வெளியவுண்மையில் எங்ஙனம் தவறினர்? இம்முடிவு நம்புவதற்கில்லை; ஒருக்கால் வம்புக்குத்தான் வழங்கியிருப்பாரோ? என நெடுநாள் பிடித்து நின்ற ஐயம் இன்று



"கம்பன் வம்பனன்று; நம்பனே" (நம்புதற்குரியனே) என விளக்கிக்காட்டி நிறுவியுள்ளார் நம் அரும்பெரும் தமிழ்த்தலைவர் T.N. சேஷாசலம் அவர்கள்.

நமது ஐயரவர்கள்தமது நியாயவாதத் திறமையைக் கம்பன் சார்பாகநின்று காட்டும்நேர்மையை அம்மம்ம! என்னென்பேன்? என்னென்பேன்? இதுகாறும் கம்பசூத்திரத்தின் திட்பநுட்பத் திறனை நுண்ணிதின் ஆய்ந்துகூறும் இவர்களைப்போல் வேறியாரிடத்தும் கூறக்கேட்டிலேன். பேரறிவுச் சுடரொளி பெற்ற ஐயரவர்கள் அவ்வொளியை இத்துணைநாள் காறும் நம் தமிழ்நாட்டிற் பரப்பாது அச்சிறு சென்னையில் எங்ஙனம் மறைத்து வாழ்ந்தார் என்பதையுன்னுங்கால்தான் எனதுள்ளம் வியப்பும் மலைப்பும் உறுகின்றது. அப்பெரியார் துணைகொண்டு "கலாநிலய" நாவாயால் கம்பன் காவியக்கடல் முற்றிலும் ஓடியாடக் காண விழைகின்றேன்.

கம்பன் தோழரும், "கலாநிலயக்" கிழமை வெளியீடும்;

"அங்கண் விசும்பின் ஆரிருள் அகற்றும்
செங்கதிர்ச் செல்வன் போலவும் குடதிசைத்
தண்கதிர் மதியமும் போலவும்
நின்று நிலைஇயர் உலகமோ டுடனே"

P. இராமாநுஜன்.

# சீர்திருத்தம்

## Man, The Reformer—by Emerson.

136 பக்கத் தொடர்ச்சி

வியாபாரத் துறையை நீத்து நீ ஓடிவந்துவிட்டதனால், அப்பாபங்களினின்று விலகினவனாகமாட்டாய். மனிதன் பொருளீட்டப் புகுகின்ற நெறி வியாபாரமே யன்றி வேறு எதுவேயாயிருப்பினும் அது ஒவ்வொன்றிலும் பேய்கள் வந்து உறவாட வசதியுண்டு. நீ கைக்கொள்ளும் தொழில் ஒவ்வொன்றிலும் தொழிலிற் கேற்றபடி குற்றங்குறைகள் இருக்கின்றன. ஆகவே, நீ மேற்கொண்ட தொழிலில் மனச்சாக்ஷி இடைப்புகுந்தால் வெற்றியோ உனக்கில்லை. பொருள்சேமிப்பதற்குப் பக்கத்துணையாய் மனச்சாக்ஷி அமையாது. வெற்றி யுனக்கு வேண்டுமெனில், சிறிது கண்ணைமூடிக்கொள்ளவுந்தான் வேண்டும். கைத்தொழில்முறை என்ற பேரால் இழிதகை வழியினில் ஊக்கமுடன் நடக்கவும், நல்லன வல்லவென் றறிந்துமே கைக்கொண்டு விவகரிக்கவும் வேண்டும். அன்புக்கும் கருணைக்கும் அதனில் இடமில்லை. வாய்மை வழியினதான உனது நல்ல நோக்கங்களை, அவை தொழிலுக்குரிய விதிகளுடன் முரண்படுங்கால், சிறிது அடக்கியேவைக்கவேண்டும், வேறுவழி யில்லை. ஏனெனில் நமது சொத்துரிமை விஷயமான சட்டதிட்டங்கள், அன்பின் வழியதாய், முதிர்ந்த அறிவின்பயனாய் விளையா. சுயநய தத்துவத்தினின்று பிறந்துளவாதலால் அச்சொத்தைச் சம்பாதிக்கும் வழியெல்லாம் தீநெறி பற்றியதாய் அமைந்துள. உயர்ந்த நோக்கமும், தெய்விக அன்பும், மனச்சாக்ஷியின் கூர்மையும் உடைய ஒருவன் இருக்கின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவன் இவ்வுலகத்தில் வாழவேண்டும். வருவாய் அதிகம் வரும் வழியினின்று அவன் விலக்கப்படுகின்றான். அவனுக்குச் சொந்த நிலமுங் கிடையாது. நிலம் சிறிது வாங்கிக் கொள்வதற்குப் பொருளும் அவனிடமில்லை. நிலம் வாங்குவதற்குரிய பொருள் தேடுவதெனின் அதற்குப் பணம்சேர்க்கும் பாதையில் தனது முழுகவனத்தையும் செலுத்தவேண்டும். இதனால் எய்திய நிலை என்ன? இனிவரும் பணத்திற்கெனப் பல வருடங்கள்வரை, பொருள்திரட்டும் நினைவிற்குத் தன்னையே அடிமையாக விற்றுவிடல். ஆனாலோ அப்பெரிய மனிதனுக்குத் தான்வாழும் ஒவ்வொரு நாழிகையும் மிகவும் சிரேஷ்டமானது. சிறிதேனும் தனதென்று நிலமொன்றும் இல்லாதான் ஒருவன் இவ்வுலகில் இருக்கும் வரை, "என்நிலம் என்நிலம்" என்று என்று பிறர்கூறும் கூற்றெல்லாம் தருமத்திற்குப் புறமான தருக்கன்றி வேறன்று. இன்றியமையாதன சில இல்லாதார் பலரிருக்க, மேன்மேலும் பொருள் வெளவி யுனதுடைமை ஆக்குவதும் அறமாமோ! எவ்வழிச்சென்றாலும் தீமைகள், விட்டுவிலக முடியாதவாறு, நம்மைச் சுற்றிக்கொள்கின்றன. நாமும், உனதென்றும் எனதென்றும், மக்களென்றும், மனைவியென்றும், சொத்தென்றும், உதவியென்றும், கடனென்றும், படுகுழிகள் பலபாய்ந்துமாள்கின்றோம்.

இவ்வழியதான சிந்தனை, பள்ளிகளில் சிறுவர்களுக்குக் கைப்பாடுபட்டு வாழ்தலின் பெருமையை விளக்கும் வகையதாய பழக்கத்தைத் தருதலின் அவசியத்தைப்பற்றிப் பிறர்நலந்தேடும் மனமுடைய பல பெரியோர்களைச் சிந்திக்கச் செய்துளது. சென்ற தலைமுறையில் ,சேர்த்த பணக்குவியலில் படிந்துள்ள பாபத்தால், இத்தலைமுறையினரான நாம் ஏற்ற பங்கு எவ்வளவாயினும்சரி, இனியாவது அதைத் தொலைக்கவும் சிறுமைகளையும் தர்மவிரோதமான பழக்கங்களையும் விடுத்து, இயற்கையுடனும் பூமியுடனும் நமது சம்பந்தத்தை ஸ்தாபித்து, மெய்வருந்திப்பாடுபட்டு ஈட்டியதை ஏற்று மனிதனாய், வீரனாய், வாழவும் நாம் முற்பட வேண்டாவா?

ஆனால் இந்நாட் சிலர் , 'என்ன, ஐயா! அவரவர் தன்மைக்கும் திறமைக்கும் ஏற்றவாறு தொழிற் பாகுபாட்டால் நாம் பெற்ற பெரும்வசதிகளை யெல்லாம் விட்டுவிடவா நீர் சொல்கின்றீர். ஒவ்வொரு மனிதனும், அவனது செருப்பைத் தைத்துக்கொள்ள வேண்டுமோ. ஊசியைச் செய்துகொள்ளவேண்டுமோ? அவனது துணியை நெய்துகொள்ள வேண்டுமோ? நீர் சொல்வது வெகுநன்று! இது மனிதனை காட்டுமிராண்டிவாழ்க்கைக்கு மீண்டும்கொண்டுபோகும் முயற்சி?" என்றிவ்வாறு சொல்லி நகைப்பர். அவர் நகைப்பது ஒருபுறமிருக்க, அத்தகைய நற்காலம் உடனே ஏற்படுமோவென்றுதான் நானேங்குகின்றேன். அக்காலம்வருமானால் இதுபொழுது மனிதன் அனுபவிக்கும் அவசியமிலாச் சிறுசௌகரியங்கள் போகத்தான் போகும். அதற்கு நான் வருந்தவில்லை. நிலத்தையுழுதுபயிரிட்டுவாழும் வாழ்க்கையில் மனிதன் தன் கடமையைச்

சரியே ஆற்றினவனுகின்ருன் என்ற எண்ணத்தால்
பிறந்த விவசாயத்தொழில் மாந்தரிடைப் பரவுமானல்,
இன்று நான் அனுபவிக்கும் பல்வசதிகளை இழந்து
விட வருந்தமாட்டேன். அரசியல், சட்டம், வியா
பாரம் ஆய இத்துறைகளில் மலிந்துகிடக்கும் போட்
டியும் ஆசையும் குறைந்து, போட்டிக்கும் ஆசைக்கு
மிடமில்லாப் பயிரிடும் பெருந்தொழில் நல்கிவைக்கும்,
தூய்மையும் அழகும் சிறுவர்கள்பால் திகழ்வதைப்
பார்க்கயார் தான் விரும்பார். இம்மாறுதலால் உனக்கு
ஏற்பட்டுள்ளதென்று நீ நினைக்கும் அசௌகரியங்கள்
அற்ப ஆயுளை யுடையதே. சிலகாலந்தான் கஷ்டம்,
பின்னர் அது அகன்றுவிடும். மனிதனது கண்களும்
திறக்கப்படும். அதிகமான ஜனங்கள் இப்படிச் செய்
தால் நம்மிடமுள்ள பலகுறைகள் வந்தவழியே போய்
விடும். பின்னர் வேலைப்பிரிவும் சீர்திருத்தமும்வேண்டு
மெனப் பெரும்பாலோர் விரும்பினரெனின் அப்பொ
ழுது தீயனகழிந்து நல்லமுறையில் தானுக வேலைப்
பிரிவு ஏற்படும். ஒவ்வொருவனும் தனக்குத் தகுந்த
தான தொழில்களைக் கைக்கொள்வான். போட்டியும்
பாபமுமின்றித் தொழில்முறைப் பிரிவினுல் ஏற்
படும் எல்லா வசதியுடனும் வாழ்வு சிறப்பெய்தும்.

மனிதசமுகத்தில் எல்லோரும் ஏற்றவொரு துறை
யில் கைப்பாடு படவேண்டுமென்று இந்நாள் வற்புறுத்
திச் சொல்லுமிது தக்கதே. அவ்வாறு தனது உழை
ப்பு என்னு முரிமையை மனிதன் இழத்தல் ஏன்
கூடாது என்பதற்குச் சிறந்த காரணமு முண்டு.
கைப்பாடுபட்டு உழைக்குமிது இந்நாளும் பழங்கதை
யாகவில்லை. எத்திறத்து யாவர்க்கும் பொருத்தமுள
உழைப்புளது. காவியக்கலையும் வேதாந்த இதிகாச
இன்பமும் நீ நுகர்வதற்கும், அறிவு வளர்வதற்கும்
அஸ்திவாரம் வேண்டு மல்லவா? ஆன்மாவும் முதிர்
ச்சியுறப் பயிற்சியாகக் கஷ்டங்கள் நிறைந்த உலகத்
தில் சலியாது உலைந்து கரையேறுதல் அவசியமாகும்.
இல்லையேல் அவ்வறிவு நம்மிடைப் பிறக்காது. உழை
ப்பு என்பது எல்லையும் முடிவு மில்லாது எந்நாளும்
நிலைக்கு மூலகத்தை நம்மனோர் அறியுமாறு அமைந்த
வொரு சாதனம். பொருளால் பெறுதற்கொத்த
நலமெல்லாம், அதை முயன்று ஈட்டியவனுக்கே உரி
யது, அவனக்குப்பின் அச்சொத்தைத் தனதாக்கிக்
கொள்பவன் பெற்றதில்லை. என்னுடைய தோட்டத்
தில் மண்வெட்டியுடன் சென்று நானேகுழிதோண்டி
நீர்பாய்ச்சும் வேளையிற்ருன் தேக சுகத்தையும் அது
தரும் உவகையையும் உணர்கின்றேன். உணரும் அக்
கணமே, என் வேலையைப் பிறர் செய்யக்கிடந்து என்
னையே நான் வஞ்சித்துக்கொண்ட செய்தியை அறி
கின்றேன். உடல் நலத்தைத் தருவதொடு அமைவ
தில்லை உழைப்பு; கல்வியையும் (Education) தரு
கின்றது. என் வயிற்றிற்கும் வாழ்க்கைக்கும் இன்றி
யமையாப் பொருள்களைப் பெறும் வழியிலுள்ள
மனப்பயிற்சி யெல்லாம் எனதாக நான் பெற்றுயர
விரும்புகின்றது இயற்கை. மாதத்திற் கொருமுறை
என்பெட்டிக்குச் சாவியைக்கண்டெடுத்துக் கையாண்
டால் போதுமோ? அதனுல் கடைக்காரன் எனக்களிக்
கும் உப்பால், சர்க்கரையால், துணியால், மற்றப்
பொருள்களால், அப்பயிற்சியைப் பெற்றவனுவேனே!
பயிரிடுபவனும் ஆலைக்காரனும் வியாபாரியும், தொழி
லாளியும், இடையிலுள்ள மற்றவர்களும், துணியின்
பருத்தியையும், சர்க்கரையின் சர்க்கரையையும் கவர்
ந்து விடுகின்றனர். [அதாவது நாம் மெய்வருந்தாது
வாங்கும் பொருள்களின் சாரத்தை இடையிலுள்ள
வர்கள் கொஞ்சங் கொஞ்சமாய்க் கவர்ந்துகொள்ளச்
சக்கையே நமக்குக் கிடைக்கின்ற தென்று அறிஞர்
எமர்ஸன் கூறுகின்ருர்]. தொழிலாளியும், வியாபாரி
யும், மற்றவர்களும் உழைத்து அதைச் செய்வதால்
உறுகின்ற பயிற்சியின் பலனெல்லாம் பெறுகின்ற
னர். நீயும், நானும் பெறுவது அவையாவும் பிழிந்து
போய திப்பியைத்தான். இதனுல் எல்லாரும் எல்லா
வற்றையும் உழைத்தே பெறவேண்டுமென்று நான்
இயம்புவதாகக் கொள்ளவேண்டா. ஒருவன் சர்க்
கரைசெய்தால், மற்ருெருவன் துணி நெய்யலாம்,
வேருெருவனும் தனக்கேற்ற ஒரு வழி பற்றிக் கைப்
பாடு முறையான உழைப்பொன்றை மேற்கொள்ள
லாம். அப்பொழுது உழைப்பினுல் மாந்தர் பெறக்
கூடிய கல்விநலம் (Education) ஏற்படுகின்றது.
ஆனலோநம்மனோர் உழுகலப்பையையும் மண்வெட்டி
கோடரியையும், மற்ற உழைப்பிற்குரிய கருவிகளையுந்
தொடக்கூடக் கூசுகின்றனர். நீயும், நானும் அவைக
ளைத்தொடாவிட்டால் என்? நாமில்லாது அக்கருவிகள்
சுகமே வாழமுடியும். நமது உதவியின்றியே நாளும்
வருஷமும் அவைகளுக்குண்டு நமக்கோ அவையில்
லாது முடியாது. உழைப்பதற் குடன்படோமாயின்
காலிரண்டு கையிரண்டு நமக்கிருக்க, உரிமையை ஈட்
டியவர்களாக மாட்டோம். இது உண்மை.

(தொடரும்)

# கம்ப ராமாயணம்.

## பாலகாண்டம்

### 10. மிதிலைக் காட்சிப் படலம்.

கோடிதேன விரைந்து கூற்றினை மாற்றினுள்.

இருளைப் பிழி இனி இந்துவும் வந்தெழுவதை வரை
கின்ருர் கம்பர். பாற்கடனின்று அமுதம் நிறைந்
தெழுந்த பொற்கலசம் போலவும்
132 பக்கத் தொடர்ச்சி
திருமா லுந்தியி லலர்ந்த தாமரை
போலவும் தோன்றிய திங்களின்
நிலவு வெண்ணெய் நல்லூர்ச் சடை
யப்ப வள்ளலின் புகழ்போல் உலகெங்கும் பர
விப் பண்டைநாள் விண்டுவி னுந்தியில்பூத்தவிவ் வண்
டம் பழையதென்று புதுப்பிக்க வெண்சுண்ணச் சாந்
தினுல் எங்கெங்கும் மெழுகியதொக்க ஒளிர்ந்தது.
மாலைக்கு மாற்ருள் இன்று சீதை, இருளிற்கு மாற்
ருள், அவ்விருளகற்றித் திகழ்கின்ற சந்திரனுக்கு மாற்
ருள். ஆதலின் அதனைநோக்கி,

நீங்கா மாமை யவர்தமக்கு
நிறமே தோற்றுப் புறமேபோய்
ஏங்காக் கிடக்கு மெறிகடற்கு
மெனக்குங் கொடியை யானுயே




## பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினுல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை சொல்பகாபிகளே இருக்கின்றன. மூர்த்துங்கள். விலை அணு 8.

## அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]



60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள் இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

**கம்பராமாயணம், பாலகாண்டம்.**

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறுது, பதம் பிரித்தும் தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு

**ஏமாங்கதத்திளவரசன்.**

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் தன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

**கந்தபுராண வெண்பா.**

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியநூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்ருேர் இதயம் களிக்கச் செய்யவல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

**முருகன், ஓர் உழவன்.**

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A., B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு.

கலா நிலயம், வெள்ளாளர் தெரு, புரசைபாக்கம்; சென்னை.

## Our Publications.

**Kamban's Kosala.**

By T. N. Seshachalam, A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book. Price Rs. 1-8-0.

மேனுட்டுப்பேரறிஞர் நால்வர்

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின் டால்ஸ்டாய், இவர் தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்

கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

**The Educational Publishing Co., *Nungambakam, Madras.***

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

# தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

## உபயோகத்தோடு சுத்தமும் அழகும் சேர்ந்திருக்குந் தாத்தினை அனைவரும் அறிவர்.

**சுத்தம்**

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

**அழகு**

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக் கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை, நவத்திலும் நவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

**உபயோகம்**

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும், எத்தனைவருஷம் அந்தச்சாமானின் அழகு அழியாம லிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்" என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

குடும்பத்து வெள்ளிச் சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

**வெகுமதியளிக்க**

வெள்ளிக் கலன்கள் உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லாத் தனிப்பெருஞ் சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை.

கப் காஸ்கெட் தட்டு, அல்லது ஸெட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி, இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம்பொருட்டுக் கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று உங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

**எங்கள் கொள்கை**

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வைர வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம். ஒருமுறை எங்களிடம் வெள்ளி பொன் கலன்கள் வாங்குபவர் பொருள்களின் தூய்மையையும் அழகையும் கண்டு பின் எங்களிடமே செல்வர்.

**எங்கள் எஸ்டிமேட்**

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

## ஸுராஜ்மல் லல்லுபாய் & கோ.,

**135**, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர். | **313**, எஸ்பளனேட், சென்னை.

## SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS, GOLD AND SILVER SMITHS.

**135, Big Bazaar, TRICHY.** | **313, Esplanade, MADRAS.**



# வர்த்தமானம்.

ஆந்திரத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர் :— ஸ்ரீமான்களான கொண்ட வெங்கடப்பையா, K.V.R. ஸாமி, பொன்னையாசாஸ்திரி வெங்கட்டராவ் ஆகிய நான்கு ஆந்திரர் 17 ந் தேதியன்று சென்னைப் போலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்படுங் காலை, அவர்கள் ஸ்ரீ பிரகாசத்தின் வீட்டில் இருந்தனர். ஆனால் உடனே அவர்கள் விடப்பட்டனர்.

***

மீனாட்சி சங்க ஆண்டுவிழா: —ஸ்ரீ மீனாட்சி சங்கத்தின் மூன்றாவதாண்டு நிறைவு விழா நிகழும் விபவ ஆண்டு மாசித் திங்கள் 17-ம் நாள் [28—2—29] வியாழக்கிழமைபிற்பகல் 3-மணிமுதல்தேவகோட்டை டிப்டி கலெக்டரும், காரைக்குடி முனிசிபல் தலைவரும் ஆகிய திருவாளர், C. திருவேங்கட முதலியார்B. A., அவர்கள் தலைமையில் நடைபெறும். அன்பர்கள் வரவை விரும்புகின்றோம்.

***

ஐரோப்பாவில் குளிர்காற்று:-இப்பொழுது ஐரோப்பாவில் குளிர்காற்று அடித்து வருகின்றது. பர்லினில் மூடுபனி பெய்துகொண் டிருக்கின்றதென்றும், அதனால் நாள்முழுதும் சூரியவெளிச்ச மில்லாது இருளாயிருக்கின்ற தென்றும் தெரிகின்றது. இங்கிலாந்திலும் குளிர் அதிகம், ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். 1895-ம் வருஷத்திற்குப்பின் பிரிட்டிஷார் இத்தகைய குளிரைக் கண்டதில்லையாம். யார்க்ஷயரில் ஜலம் உறைந்து போயுள்ளது. தேம்ஸ் நதியிலும் பனிக்கட்டி மிதக்கின்றது. இங்கிலாந்தில் மொத்தத்தில் 11ஆறுகள் உறைந்து போயுள்ளன.

ஆஸ்திரேலியாவும் குளிரினால் அவஸ்தைப் படுகின்றது. அங்குப் பனிக்கட்டிமழை பெய்கின்றதென்றும், நிலக்கரிக் குறைவு ஏற்பட்டுள்ள தென்றும், ரயில்வேப் போக்குவரத்து நின்று போயுள்ள தென்றும், பள்ளிக் கூடங்களெல்லாம் மூடப்பட்டன என்றும் தெரிகின்றது.

***

சென்னையில் சைமன் கமிஷன்:— சென்ற திங்கட்கிழமை காலை 8-மணிக்கு சைமன் கமிஷன் அங்கத்தினர் சென்னைத்துறைமுகத்தில் வந்து இறங்கினர். கார்ப்பொரேஷன் தலைவர் ஸ்ரீமான் எ. ராமஸ்வாமி முதலியாரும் மற்றுஞ் சிலரும் துறைமுகம் சென்று உபசாரப்பத்திர மொன்றைப் படித்துக் கொடுத்தனர். சென்னைப் பகிஷ்காரக்காரர் கருப்புக் கொடிகளுடன் நேப்பியர் தோட்டத்திலிருந்து துறைமுகத்திற்குச் செல்லுகையில் இடையில் போலீசார் மேலே செல்லவிடாது தடுக்க அவர்கள் கடற்கரை சென்று கூடிப் பேசித் திரும்பினர். ஸ்ரீமான்களான ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பிரகாசம் முதலாயனோர் கூட்டத்துடன் நடந்து சென்றனர். சென்னையிலுள்ள கடைகள் எல்லாம் மூடப்பட்டனவாம். ஆனால் எந்தவிதமான கலகமும் நடக்கவில்லை. ஜனங்கள் அமைதியுடன் நடந்துகொண்டதை எல்லோரும் பாராட்டினர்.

***

ஆப்கன் கலகநிலை:—ஆப்கன் புரட்சிநிலையில் மாறுதல்கள் ஏற்படவில்லை. ரம்ஸானுக்குப் பிறகு அமனுல்லாகான் புரட்சிக்காரர்களைத் தாக்கப் போவதாக ஒருவிமானம் துண்டுப் பிரசுரங்களைப் பரப்பியுள்ளதாம். காபூலில் புதிய அமீர் பாச்சா சாக்கோ ஆண்டு வருகின்றார். காபூலிலிருந்து வந்த ஒரு பெஷாவர் வியாபாரி கூறும்விபரம் வருமாறு:— பாச்சாசாக்கோ சுங்க உத்தியோகஸ்தரான அப்துல் ரஹிமான் என்பவரை அவரது பெண்ணுடன் தனது அரண்மனைக்கு வருமாறு உத்திரவிட்டார். அவர் அரண்மனை செல்லவில்லை. உடனே அரண்மனைச்சேவகர்கள் பலவந்தமாய் அழைத்துச் செல்லும்பொருட்டு அப்துல்ரஹிமான் வீடுவந்தனர். உடனே அவன் தனது குமாரத்தியைச் சுட்டுவிட்டு அரண்மனை சென்றார். பாச்சா சாக்கோ அவரைச் சிறையிலிட்டுள்ளார் என்று தெரிகின்றது. பாச்சா சாக்கோ பலவிடங்களில் கூட்டம்போட்டு அமனுல்லாகான் காபிரி (Kaffir) என்று கூறி வருகின்றார். காபூலில் தேத்தண்ணீர்க் கடைகள் இரவு முழுதும் திறந்திருக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. காபூலில் ஜனங்கள் பழைய அமீர் அமானுல்லாவை, அமானு என்று அழைக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. அப்படிச் செய்யத் தவறியவர்களுக்கு 25 ரூ அபராதமும் 25 சவுக்கடியும் விதிக்கப்படுமாம்.

***

கனம் சாஸ்திரியாருக்கு உபசாரம்:— தென் ஆப்பிரிக்காவிலிருந்து சென்றவாரம் பம்பாய் வந்து சேர்ந்த கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரை உபசரிக்க, 16ந் தேதியன்று பம்பாய் வாசிகளின் கூட்டம் நடந்தது. ஸர்,சேதல்வாட் கூட்டத்தில்தலைமைவகித்தார். அவர் தமது முன்னுரையில், ஸ்ரீசாஸ்திரியாருடைய பெருமைக் குணத்தையும், அறிவின் ஆற்றலையும்பற்றிக் கூறித் தென்னாப்பிரிக்காவில் இந்தியரின் நலத்தையொட்டி அவர்செய்துள்ளதைஎடுத்துக்கூறி, சாஸ்திரியாரைப் பேசுமாறு கேட்டுக்கொள்ள, அவர் கரகோஷத்திற் கிடையே பேசியதாவது:—இப்பொழுது இந்தியர்கள் விஷயமாய்த் தென்னாப்பிரிக்காவில் ஏற்பட்டுள்ள திருப்திகரமான மாறுதல்களுக்கு நான் காரணமாக மாட்டேன். என்னிடம் பூர்ண நம்பிக்கை கொண்டு இந்திய அரசாங்கத்தார் என்னை அங்கு அனுப்பிவைத்தனர். செல்லுகையில் காந்தி அடிகளின் ஆசிர்வாதத்தையும் பெற்றேன். முன்னவர் நம்பிக்கையையும்,பின்னவர் ஆசீர்வாதமும்பெற்றனக்கு எனது வேலையில் நம்பிக்கை ஏற்பட,என்னால் இயன்றவளவு சமரசத்திற்கானது செய்தேன். தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தார் இந்தியரிடம் மதிப்புக் கொண்டுள்ளார்கள். இன்னும் சில வருடங்களில் இந்தியர் நிலை சிறந்துவிடும். இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகின்றேன். இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒருமுறை இந்தியாவிலிருந்து, இந்தியக்கலைகளிலும் மேனாட்டுக் கலைகளிலும் சிறந்த இந்தியர் தென்னாப்பிரிக்கா சென்று, இந்தியருக்கு ஊக்கத்தைத் தருவதுடன், அங்குள்ள பிரிட்டிஷாருக்கும், மற்ற ஐரோப்பியர்களுக்கும், இந்தியாவின் பண்டை நாகரிகத்தையும், கலைவளத்தையும் எடுத்துக் கூறிவரவேண்டும். இந்தியக் கலைகளின் உயர்வையும், நாகரிகத்தையும் அவர்கள் அறிந்தால்தான் அவர்களுக்கு இந்தியரிடம் மதிப்பு ஏற்படும்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

## கலா நிலயம்

**1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.**

அதனிலடங்கிய முக்கியமாயகட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம். தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதியென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், இவைதவிர கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு. இன்னும்பல விஷய விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்படட:—

பைண்ட் செய்யாதது

உள்நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளிநாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்ட் பைண்ட்,

உள்நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்ட் பைண்ட்,

உள்நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

## வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| அன்பு | 0 | 1 | பொதுமதம் | 0 | 2 |
| பலவகை மனிதர் | 0 | 1 | ஆறுதாரம் | 0 | 2 |
| தவம் | 0 | 1 | சந்தேகம் | 0 | 2 |
| பொறுமை | 0 | 1 | கற்பு | 0 | 3 |
| இருவினை | 0 | 2 | அஸ்தபூஷணம் | 0 | 4 |
| இல்லறம் | 0 | 2 | பதினாறுபேறு | 0 | 4 |
| ஆலயவழிபாடு | 0 | 2 | என் தந்தையார் | 0 | 6 |

**மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டேக்குக் கொடுக்கப்படும்.**

தபால் சார்ஜ் இனும்.

**இன்றே எழுதுங்கள் !**

**நவீனகதா புத்தகசாலை,**
மங்கமாரி வீதி, இரங்கூன்.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

*MANAGER:—*
***"KALANILAYAM"***
***11, VELLALA STREET.***
**Purasawalkam, MADRAS.**

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)